விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 தை 22 ஐ, அல் 24 இதழ் 358
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-2-1986

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA RECEIVED 5-2-1986 PERIODICALS DIVISION LIBRARY

## "இவ்வாண்டில் பயங்கரவாதத்தை ஒழிப்பேன்"

### சுதந்திரதின செய்தியில் ஜனாதிபதி

[கொழும்பு]

''இந்த நாட்டிலுள்ள பயங்கரவாதத்தை இந்தவருடம் ஒழித்து விடுவேன் என்றுநாட்டில் அமைதியை விரும்பும் மக்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்''

மேற்கண்டவாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

சுதந்திரதினத்தை யொட்டி வெளியிடப்பட்டுள்ள செய்தியொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்

## கிளிநொச்சி, முல்லைத்தீவு சம்பவம்: இந்தியா கவலை

[சென்னை]

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் நடைபெறும் படுகொலைகளையிட்டு இந்தியா பெரிதும் கவலைகொண்டுள்ளதாக 'இந்து' ஏடு எழுதியுள்ளது.

ஒரு இராணுவத்தீர்வுக்கான அவகாசத்தை பெறுவதிலோ

[5ம் பக்கம் பார்க்க]

★ தகிக்கும்வெய்யிலில்மூன்று மைல்தூரம்

# 8,000 மாணவர்கள் நடத்திய

# எழுச்சிமிகு ஊர்வலம்!



(கா. யோகநாதன்)

**பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு கோரி யாழ். நகரிலும் அதன் சுற்றுப் பகுதியிலுமுள்ள கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் எண்ணாயிரம் மாணவர்கள் யாழ். நகரில் சுலோக அட்டைகளுடன் எழுச்சிமயமான ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைப் பாதுகாப்பு வலயத்தினூடாக நடத்திச் சென்று கச்சேரியை முற்றுகையிட்டு இறுதியில் யாழ். மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றைக் கையளித்தார்கள்.**

சகல கல்லூரி மாணவர்களும் அங்கம் வகிக்கும் 'தேசிய மாணவர் மன்றம்' இந்த ஊர்வலத்தை வழிநடத்திச் சென்றது.

### மாணவர் ஊர்வலம்

நகரின் நாலா பக்கங்களிலிருந்தும் காலை 9 மணிக்குப் புறப்பட்ட மாணவர் அணி வேம்படிச் சந்தியை வந்தடைந்து அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதிவழியாகச் சென்றது.

### "இராணுவமே வெளியேறு"

ஆஸ்பத்திரி வீதிவழியாகச் சென்று முனீஸ்வரன் வீதியை நெருங்கியபோது ஒவ்வொரு மாணவரும் முனீஸ்வரன்வீதிப் பக்கம் நோக்கி, ''இராணுவமே வெளியேறு'', ''கல்வியில் கைவைக்காதே'', ''பாதுகாப்பு வலயத்தை வாபஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நிலைமை

(கிளிநொச்சி நிருபர் கே.வி.கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த வேளையில் இராணுவ முகாம் பக்கமாக இடையிடையேகுண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன. நகரப் பகுதியில் சிலவீடுகளும் சேதமடைந்துள்ளன.

ஹெலிகப்டர் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றதாகவும் தர்மபுரம், வட்டக்கச்சிப் பகுதியில் பல பொதுமக்கள் மரணமாகியும் காயமடைந்தும் உள்ளதாகவும் தெரியவந்தது.

அநுராதபும், ஆனையிறவு, கொழும்பு முதலான இடங்களிலும்இருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்ட இராணுவத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் 'கோட்டைவெடி'!

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப்பகுதியிலிருந்து நேற்றிரவு 9 மணியளவில் ஏவிவிடப்பட்ட றொக்கட் லோஞ்சர், குண்டுகள் பல தடவை யாழ்.நகர் சுற்றுவட்டத்தில் விழுந்து வெடித்துச்சிதறின. (மா

## சீன செய்மதி

[பீகிங்]

சீனா ஒரு புதிய செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

செய்மதி செலுத்தும் தளத்தில் சீனப் பிரதமர்பிரசன்னமாயிருந்தது குறிப்பிடத் தக்கது.

## விடுதலைப்புலிகள் அறிக்கை

[ஏ. வி. மாணிக்கம்

வட்டக்கச்சி - தருமபுரம் வீதியில் உள்ள ஐந்துலாம் படிச்சந்தியில் வைத்து தேடுதலிலீடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும்தமதுவிடுதலைப் போராளிகளுக்குமிடையே கடந்த மூன்றுநாட்களுக்கு மேலாக இடம்பெற்றபலத்த நேரடி சண்டையில் 15க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மற்றும் ஒரு 'ஸ்கவுட்' காரும் கவசவண்டியும் சேதப்படுத்தப்பட்டதாகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்றுவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரடிச் சண்டையில் விடுதலைப் புலி யைச் சேர்ந்த 'சுகு' என்றழைக்கப்படும் குமாரையா ரமேஷ், சம்பந்தன் ஆகிய இரு போராளிகள் 'மோட்டர்ஷெல்' தாக்கி மரணமடைந்ததாக

(5-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி சவர்க்காரம்: மாணவர் பகிஷ்கரிக்க முடிவு

[யாழ்ப்பாணம்]

''தேசிய மாணவர் மன்றம் தென்பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களைப் பகிஷ்கரித்து வடபகுதியில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு ஊக்கமளிக்க முடிவுசெய்துள்ளது. இதன் முதற்படியாகத் தென் பகுதியில் உற்பத்தியாகும்

(8-ம் பக்கம் பார்க்க)

## கல்மடு சம்பவம்: அரசு அறிக்கை

[கொழும்பு]

கல்மடுவில் ஆயுதப்படையினரை நோக்கி தீவிரவாதிகள் தாக்கியதாகவும், ஆயுதப் படையினர் திருப்பித் தாக்கியதில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் நேற்று அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

கல்மடுவிலுள்ள ஒரு குளம் தீவிரவாதிகளால் உடைக்கப்பட்டதால் வட்டக்கச்சி, தருமபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாய விளைச்சலும், பாதைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "இலங்கை அரசின் நோக்கத்தை அறிந்தபின் அடுத்த நடவடிக்கை!"

### பாரதவெளியுறவு அமைச்சர் கருத்து

(புதுடில்லி)

''இலங்கையில் நடைபெறும் அண்மைக்கால நிகழ்வுகள் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குச் சாதகமாகஇல்லை. இலங்கை அரசின்நோக்கத்தைஅறிந்த பின்னரே எமது அடுத்த நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கப்படும்.''

வாஷிங்டனுக்குச் செல்லும்வழியில் டுபாய் விமான நிலையத்தில் அகில இந்திய வானொலி நிருபரிடம் பேசுகையில் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பகத்மேற் கண்டவாறு கூறினார்.

இதேவேளையில் இலங்கை அரசு இனப்பிரச்னைக்குஇராணுவத் தீர்வு காண முயலக்கூடாது என்பதில் இந்திய அரசாங்கம் மிகக்கவனமாக இருப்பதாயும், மலையகத் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தாக்குதல்கள் பற்றி இந்திய அரசு ஆழ்ந்தகவலை கொண்டுள்ளதாயும் வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போது கூறியுள்ளதாக 'ராய்ட்டர்' செய்தி ஏஜன்சி தெரிவிக்கிறது.

திரு.பண்டாரி தமிழ்நாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், எம் சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன் ஆகியோரையும் ஈழ தேசிய விடுதலை முன்னணிப் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பின்போது தமிழ்நாடு மின்துறை அமைச்சர் திரு. எஸ்.ராமச்சந்திரனும் பிரசன்னமாயிருந்தார்.

## பிரார்த்தனை தினம் 13-ல்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாடு முழுவதையும் 24 மணி நேரம் ஸ்தம்பிக்கச் செய்யும் விதத்தில், தமிழ்பேசும் மக்கள் நடத்தவிருக்கும் பிரார்த்தனை தினம் ஒருநாள் பின்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த பிரார்த்தனை குழுவின

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வசதி, சகல பிரயோசனங்களும் உள்ள வீடு எட்டுப் பரப்பு ஏழுகுழி காணி மலிவு விற்பனைக்குண்டு. தொழிற்சாலைக்கு மிகவும் ஏற்றது. வ. சி. இராசையா, வடலிஅடைப்பு, பண்டத்தரிப்பு. C 514

நெல்லை க. பேரனின் முதற் பரிசுபெற்ற ''விமானங்கள் மீண்டும் வருக'' குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். (C 459)

200 'Love Birds' இரண்டு கூடுகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீடியோ பிரசாத், இல. 232. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 544)

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய

## அறிவித்தல்

கோப்பாய், இருபாலை, ''லிங்கஸ்தான்'', காலம்சென்ற சின்னத்துரை அமிர்தலிங்கம் என்பவரது மரணச் சொத்தின் விடயத்தில்

| மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல: ரி/3933

சின்னத்துரை அமிர்தலிங்கம் கைம்பெண் கமலாவதி. ''லிங்கஸ்தான்'', இருபாலை, கோப்பாய்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்குமேலேபெயர் குறிப்பிட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும்இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:

சி. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
C 527

சுண்டுக்குளியில்
L. P. GAS
வீடுகளில் டெலிவரி செய்யப்படும்.
Dyn Ads.
MARKETING
476, பிரதான வீதி,
சுண்டுக்குளி.
(சென். ஜோன்ஸ் முன்பாக) A-182

## வாடகைக்கு

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள சகல வசதிகளுடனும் கூடிய அறை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். தண்மதி முத்தையா, 97, பிறவுண் வீதி, கொக்குவில். C 531

## தேவை

தனிப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு அனுபவமும் திறமையும் உள்ள ஆங்கில ஆசிரியர்கள்; பெண் காசாளர்; ரியூட்டறி வாங்கில் மேசைகள் தேவை. 10-2-86க்கு முன்பாக சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். Director VTC-Tuition, Velanai. C 540

பள்ளிக்கூட வாங்கு மேசைகள் உடனடியாகத் தேவை. யோசப் 'ஜொஸ்லின்' பத்திமா வீதி, பண்டத்தரிப்பு. C 541

G. C. E. (O. L.), (A. L) வர்த்தக பாடங்கள் தமிழில் படிப்பிப்பதற்கு பகுதிநேரஆசியர்கள் உடன் தேவை. இம்பீரியல் இன்ஸ்ரியூட், டிஸ்பென்சரி லேன், இளவாலை. C 542

மின்தறியில் அனுபவமுள்ள தொழில்நுட்ப வியலாளர்களும், நெசவாளர்களும் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் C 517 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 517

### ஏழாண்டு நினைவு நாள்

அமரர் பண்ணாகம்
அ. தி. அப்புத்துரை
(மாஸ்டர்)
அவர்கள்

தோழா! நீ கொண்ட
தூக்கம் கலையவில்லை;
ஏழாண்டாய் நான்கண்ட
ஏக்கம் கலையவில்லை!

நண்பன்,
சோம. திருச்செல்வம்
குவைத்,
1986-01-30. A 189

### முதலாண்டு நினைவு நாள்

(முன்னாள் பொலிஸ் ஊழியர்)

அமரர்
சோமசுந்தரம்
பாலசுப்பிரமணியம்
(பாலு)
அவர்கள்

காலன் வந்து அழைத்த
போது
கடுகதியாய் விரைந்தீரே-
உம்மைப்
'பாலன்' என்று
அழைக்கின்றோம்
பரந்தோடி வருவீரா?

உறவினர்கள்.
1986-01-21.

பண்ணாகம்,
சுழிபுரம்.

### 90-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
ப. கிருபாகரன்
(சத்தியன்)

மலர்வு: 10-02-1969
உதிர்வு: 07-11-1985

எங்கள்
இதயங்களில்
இனிமை தரவந்தவனே!
எதிரியின்
துப்பாக்கிக் குண்டிலே
உன் உயிரை
இந்த மண்ணிற்கே
தந்தவனே!
திடீரென்று
ஏன் -
எங்களுக்கு
சோகங்களைச் சொந்த
மாக்கிவிட்டு
சொல்லாமல் மறைந்து
போனாய்?
எங்கள்அன்புச்செல்வமே!
நாளை வரப் போகும்
ஒரு உதயத்திலே
உன்னை - நாங்கள்
மறுபடியும் காண்போம்.

அப்பா, அம்மா,
சகோதரர் சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

பரந்தன். C 452

### 2-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
உமாதினி
இராஜேந்திரம்
(உமா)

அன்னை மடியில்:
23-09-1973

இறைவன் அழைப்பில்:
04-02-1984

அன்பின் திருவுருவாய் அறிவின் திருவிளக்காய் என்றும் எங்கள் இல்லத்தின் சுடர் விளக்காக வந்து உதித்தார். இன்று எம்மை எல்லாம் துயரில் ஆழ்த்தி முன் சென்றாய். எனினும் எம்மைவிட்டு நீ மறையவில்லை. என்றும் எம்முடன் இருந்துஎமக்கு தெய்வம் போல் வழி காட்டுகிறாய்.

அப்பா, அம்மா,
அன்புச் சகோதரர்கள்,
திரு. திருமதி
இராஜேந்திரம்.

### ரூபவாஹினி

பெப்ரவரி 4 செவ்வாய்க்கிழமை

காலை:

8-30 சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் (நேரடி ஒளிபரப்பு)
9-45 'உடன கீ' (இசை)
10-10 'நிதஹஸ் லங்கா' (சிங்களம்)
10-35 காலை ஒளிபரப்பு முடிவு

மாலை

5-00 செய்திகள்
5-05 விஞ்ஞானம் [தமிழ்]
5-30 'பிளக் பியூட்டி'
6-00 ''எல்லாப்பயிற்சியம் வீணாகுமா?''
6-15 'ரட்டின் தொட்டின்' (தமிழ்)
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 'வடத் நியரத்' டெலி நாடகம்
7-25 'தட்ஸ் இன்கிறிடிபிள்'
8-00 செய்திகள் [சிங்களம்]
8-20 'தட்ஸ் இன்கிறிடிபிள்' [தொடர்ச்சி]
8.45 கீழைத்தேய இசை [அறிமுகம்]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 'சவன் மிஹிர' [இசை]
9-45 'நிதஹஸ் சிறுவிலி' [இசை]
10-15 'த சலிவன்ஸ்'
11-05 ஒளிபரப்பு முடிவு

## அமிர் கண்டனம்

[சென்னை]

''வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்துள்ள யோசனையையும் சட்டம், ஒழுங்கு, நிதிக்கொள்கை பற்றிய யோசனையையும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன முழுமையாக நிராகரித்து விட்டார்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியை திரு. அமிர்தலிங்கம் புதுடில்லியில் சந்தித்து இலங்கை இனப்பிரச்னை குறித்து விரிவாக பேச்சு வார்த்தை நடத்தினர். அப்பொழுதே இவ்வாறு குற்றம் சாட்டினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ள யோசனைகளுக்கும் ஜெயவர்த்தன மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் நிறைய வேறுபாடு இருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் திரு. பண்டாரியிடம் தெரிவித்தார். (ரா)

## உடனடித் தேவை

தையல் வேலையில் சிறந்த அனுபவமுடைய பெண்பிள்ளைகள் உடன்தேவை. நேரில்வரவும்.

அன்ரனி காமென்ஸ் (GARMENTS)
''ராஜஸ்தான்'' (தபாற்கந்தோர் அருகாமையில்)
கரவெட்டி. C-535

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: 5586

கந்தையா சிவசேகரம். தெல்லிப்பழை கிழக்கு,
வழக்காளி,

கந்தசாமி கைம்பெண் ஞானேஸ்வரி எதிராளி,

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக்கிடைத்த நீதிமன்றக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1986ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி (20-02-1986) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 18500/-வும் மேலும் 10000க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 60% வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 11ம் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1985ம் ஆண்டு தை மாதம் 17ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12%வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 4932-10 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 2771-61 நடைபெற வேண்டிய செலவு ரூபா 1062-75 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 1097-75 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை 'ஈரபாங்கைக் கலட்டியும் ஊரி சாட்டியும்'' நிலப்பரப்பு [3] மூன்று குழி (17¾) பதினேழே முக்காலும் ஆனால் 1979ம் ஆண்டு மார்கழி மாதம் 24ந் திகதி நிலஅளவையாளர் T. விக்கினேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட 213ம் இலக்க அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு (3) மூன்று குழி (4. 4) நாலு தசம் நாலும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கு இளையகுட்டி அப்புக்குட்டியினுதனமும் ஒழுங்கை முகப்பும் வடக்கு எல்லுப்போலை கதிரனினுதனமும் நவரத்தினம் பெண் நாகேஸ்வரியினுதனமும் மேற்கு செல்வரத்தினம் பெண் மகேஸ்வரியினுதனமும் தெற்கு ஆறுமுகம் கைம்பெண் சந்திரபூபதியினுதனம் இதடங்கலும் இன்னும் கிழக்கேயுள்ள ஒழுங்கையிலிருந்து இக்காணிக்குவரும் ஒழுங்கைப் பங்கும் இது H502/17ல் பதியப்பட்டது.

க. நவரத்தினம்,
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்,
C-538

வட்டுகிழக்கு.
வட்டுக்கோட்டை.
31-12-85.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதகுல உரிமையைப் பாதுகாக்க மதத்தலைவர்கள் பாடுபடவேண்டும்"

## பாப்பரசர் செய்தி

(புதுடில்லி)

"மனிதகுல உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு எல்லா மதங்களின் தலைவர்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்."

பாப்பரசர் இரண்டாவது ஜோன்போல் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற சர்வமதநிகழ்ச்சியொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலை கௌரவிக்கும் முகமாகவே இந்த சர்வமத கலாசார நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி பாப்பரசரின் இந்திய விஜயம் தொடர்பாக விடுத்துள்ள செய்தியில், இந்தியாவுக்கு பாப்பரசர் வருகை தந்துள்ளமை ஒரு அரியவாய்ப்பாகும் என்றும்; பல மதங்களின் இல்லமாக விளங்கும் இந்தியாவில் சகல மதங்களுக்கும் சமஅந்தஸ்து வழங்குவதில்தான் நம்பிக்கையுண்டு என்றும் குறிப்பிட்டார். (பி

### பாப்பரசருக்கு சர்வமதத் தலைவர்கள் வரவேற்பு

(சென்னை)

பாப்பரசர் 2வது அருளப்பர்சின்னப்பருக்குசர்வமதத்தலைவர்கள் இம்மாதம் ஐந்தாந் திகதி சென்னையில் வரவேற்பளிப்பர்.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் பாப்பரசருக்குச்சர்வமதங்களின் சின்னங்கள்பொறிக்கப்பட்ட, சந்தனக்கட்டையில் செய்யப்பட்ட தர்மசக்கரம் வழங்கப்படும். இவ் வைபவத்தில் காஞ்சிகாமகோடி சுவாமிகள் உட்பட அனைத்து மதத்தலைவர்களும் பங்குகொள்வர். [செ]

## 11ராணுவவீரர்பலி!

(மணிலா)

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் இராணுவ ஜீப்வண்டியொன்றை மறைந்திருந்து தாக்கியதில், ஒரு பெண் உட்பட பதினொரு இராணுவ வீரர்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இராணுவ வீரர்கள் ஒரு தீவில் அமைந்துள்ள தங்களது இராணுவ தலைமையகத்தை நோக்கிச் செல்கையிலேயே இச்சம்பவம் நேர்ந்ததாக இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (பி)

## சோவியத் உயர் குழு ஈரான் விஜயம்

[மாஸ்கோ]

சோவியத் வெளியுறவுத் துணைஅமைச்சர் திரு ஜோர்ஜ் குரோமிக்கோ தலைமையிலான சோவியத் உயர்நிலை பிரதிநிதிக் குழுவொன்று, ஈரானிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தெஹ்ரான் போய்ச் சேர்ந்துள்ளது.

ஏழு ஆண்டுகளுக்குமுன்னர் ஈரான் மன்னர் ஷா பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட பின்னர் சோவியத் அரச பிரதிநிதிக் குழுவொன்று ஈரானுக்குச் செல்வது இதுவே முதல்முறையாகும்.

ஈரான் சோவியத் பேச்சுவார்த்தைகளில் அறுபத்தாறு மாதகால ஈரான்—ஈராக் போரைப் பற்றியும் விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

ஈராக்கிற்கு சோவியத்யூனியன் மிகப்பெருமளவில் ஆயுதங்களை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. [பி]

### உ. பி. பட்ஜட்

[புதுடில்லி]

உத்தரபிரதேச மாநிலசட்டமன்றத்தின் இரண்டு சபைகளின் வரவுசெலவுத்திட்டக் கூட்டத் தொடர் எதிர்வரும் வியாழக்கிழமைஆரம்பமாகின்றது.

ஆரம்பநாளன்று மாநில கவர்னர் இரண்டு சபைகளின் கலப்புக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

இம்மாதம் 14ம் திகதி 1986, 1987 ஆண்டுக்கான வருடாந்த வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும். (பி)

## மானிப்பாய் இந்து மாணவர் முன்மாதிரி!

(யாழ்ப்பாணம்)

"இரத்தம் வழங்கி என் உயிரைக்காப்பாற்றுங்கள்" என்று யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் வேண்டுகோளை ஏற்று, மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களும் தாமாகவே முன்வந்து இரத்தானம் வழங்கினர்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் இரத்ததானம் வழங்கினர். இம்மாணவர்களின் முன்மாதிரியான செயலை பலரும் பாராட்டியுள்ளனர். (ச)

### இருகுட்டி ஈன்ற 40 வயது யானை

(புதுடில்லி)

தமிழ்நாடு வனவள இலாகாவிலுள்ள நாற்பது வயது யானை இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது. ஒன்று ஆண். மற்றது பெண்.

பிடித்து வளர்க்கப்பட்ட யானையொன்று இரண்டு குட்டிகளை ஈன்றது அரிதாகும்.

இந்த இலாகாவில் 140 ஆண்டுக்கால வரலாற்றில் இம்மாதிரியான பிரசவத்தில் இது மூன்றுவது என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். (பி)

### இராணுவம் சுட்டு நால்வர் பலி!

(கொழும்பு)

கும்புறுப்பிட்டியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 4 விவசாயிகள் இராணுவத்தினர் தேடுதல் நடத்தியபோது சுட்டுக்கொல்லப்பட்டதாக, சென்னை ஈழமக்கள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நால்வரும் அடையாளம் காணப்பட்டதாகவும், கா. செல்வராசா, செ. கைலாசபிள்ளை, க. ரவிந்திரன், இ. தங்கராசா ஆகியோரே பலியானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ய]

### விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் சமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான உரத்திருட்டையடுத்து அந்நிலையத்தில் விதை தானிய விற்பனை அண்மைக் காலமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கமநலசேவை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது பாதுகாப்பின்மையை காரணங்காட்டி விதைதானியங்களை விநியோகிக்க மறுப்புத்தெரிவித்துள்ளனராம். கவலையடைந்த விவசாயிகள் இது தொடர்பாக பிரச்னையை மேலிடத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர். (ச)

## விடுதலை செய்யக்கோரி மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் வைத்து கடந்த மாதம் 30ம் திகதி இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்ட வி. செல்லையாவை விடுதலை செய்யும்படி கோரி யாழ். கண்டி வீதியில் யூததேயு ஆலயச் சந்தியில் ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்கள் வழிமறிப்புப்போராட்டத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இதனால் கண்டி வீதி முள்ளி வீதி கிழக்கு அரியாலை வீதி போக்கு வரத்துக்கள் ஸ்தம்பித்துள்ளன.

செல்லையாவைக் கடத்திச் சென்ற அன்று கடத்தல்காரர்களினால் கொண்டு செல்லப்பட்ட இரு உழவு இயந்திரங்களும் செல்லையா குடும்பத்தாரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வழிமறிப்புப் போராட்டத்தில் இருப்பவர்களை எழுப்புவதற்கு ஆயுதம்தரித்த சிலர் முயன்றபோதும் கடத்தப்பட்டவரைவிடும்வரை தாம் மறியல் செய்யப் போவதாக உறுதியுடன் இருக்க முடிவு செய்துள்ளனர். (ஐ)

### சமாதானம் வேண்டி பிரார்த்தனை

(மாவிட்டபுரம்)

வீமன்காமம் வீனியவரை இராஜராஜேஸ்வரி தேவஸ்தானத்தில் நாட்டில் சமாதானம் நிலவவேண்டி கந்தபுராண படனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தேவஸ்தான ஆதீன கர்த்தா அ. துரைச்சாமிஐயர் தலைமையில் முன்னாள் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உதவி அதிபர் திரு. சச்சிதானந்தம், திரு. எஸ். சிவஞானம், திரு. எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் நடாத்துகிறார்கள்.

### தையல் பொருட்காட்சி

(உடுவில்)

சண்டிலிப்பாயில் உள்ள கிறிஸ்தவ தொடர்புகள் என்னும் நிலையத்தில் தையல் பொருட்காட்சி அண்மையில் நடை பெற்றது. பொருட்காட்சியினை நிலையத் தலைவர் ஆரம்பித்து வைத்தார்.

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிற்றாலய தையல் பயிற்சி ஆசிரியைசெல்வி. சி. செனித்ரா பயிற்சி மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினர்.

### மாணவர் மூலம் ஆயிரம் நூல்கள் சேகரிக்க முயற்சி

[மாணிப்பாய்]

"ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகள் அதிகவிலை கொடுத்து தத்தமது நூல் நிலையங்களுக்கு நூல்களை வாங்குவது சிறிது சிரமமான காரியம். இதனால் இப் பாடசாலைகளில் பயிலும் ஒவ்வொரு மாணவனும் குறைந்தது இரு நூல்களையாவது தமக்குத் தெரிந்தவரிடமிருந்து இலவசமாகப் பெற்று பாடசாலைக்கு உதவினால் பாடசாலை நூல் நிலையம் வளர்ச்சிபெறும். அத்தோடு இப் பாடசாலைகளில் பயிலும் மாணவரது அறிவும் துரிதகதியில் வளரும்."

என ஆனைக்கோட்டை றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதிபா. கந்தசாமிமாணவர் மன்றக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் எடுத்துக் கூறினார். அதிபர் தலைமையில் இப் பாடசாலைக்கு ஆயிரம் நூல்கள் சேகரிக்கும் நோக்கத்தோடு இந்த ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது என்றும் மாணவர் முயன்றால் ஓரிரு மாதங்களில் இதனைச் சாதித்து விட முடியும் என்றும் எடுத்துக் கூறினார்.

### திருமண வைபவங்களுக்கு தடை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை பகுதிகளிலுள்ள சில சைவாலயங்களில் திருமண வைபவங்களை நடாத்துவதற்கு அண்மைக் காலமாக தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.

திருமண வைபவங்களை ஒழுங்கு செய்ய மேற்படி ஆலயங்களுக்குச்செல்வோருக்கு ஆலய பூசகர்கள் மறுப்புத் தெரிவிப்பதோடு ஆலய நிர்வாகிகள், பரிபாலன சபையின் தீர்மானமே இதற்குக் காரணமென கூறி விடுகின்றனராம்.

ஆலய நிர்வாகிகளின் இந்த நடவடிக்கை குறித்து பொது மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (ச)

### சைவசமய அறிவுப்பரீட்சை

(உடுவில்)

வண்ணார்பண்ணை சாந்தயர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் கடந்த முப்பது ஆண்டு காலமாக நடத்தப்பட்டுவரும் சைவ சமய அறிவுப் ரீட்சை மாதம்24 ம் திகதி நடைபெற உள்ளதாக மேற்படி பரீட்சை செயலாளர் திரு. வ. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 6 ம் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரையான மாணவர்களுக்கு சமய அறிவுக் கட்டுரைப்போட்டியும், ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு சமய அறிவுப்பரீட்சையும், திருமுறை மனனம், நீதிநூல் மனனம் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

[7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் தன் அகங்காரத்தினுல் பலவீனமடைகிருன். பகுத்தறிவு தோல்வி அடையும்போதுதான் மனிதனுக்கு ஞானம் உண்டாகிறது.

—ஞானேதயம்.

# நமது நோக்கு

## மரணத்தின் மத்தியில்

யாழ்ப்பாணக் கோட்டைக்கருகாமையில் உள்ள முற்றவெளி மைதானத்தில் நடந்துவந்த மாபெருங்கூட்டங்கள் மனத்திரையில் ஒடுகின்றன. இன்றைய 'பாதுகாப்பு வலயம்' தூண்டும் சினிமாக்காட்சி இது.

தமிழ்த்தலைவர்கள் எங்கள் சுதந்திரம் வேண்டிப் பேசும் பேச்சுக்களை பல்லாயிரம் மக்கள் கைதட்டி ஆரவாரம்செய்து சுவைத்தனர்.

அரசாங்கத்தைத் தும்பு பறக்க கண்டித்தபோதெல்லாம், அங்கு ஒழுங்கு கட்டுப்பாட்டை அவதானிக்க வந்துநின்ற பொலிஸார் முழிசிக்கொண்டு உலாவியது நினைவுக்குவருகிறது. இன்று 'ஆயிரம் மீற்றர்' ஆட்சி எவரெடி யமன் போல் நிலவுகிறது.

எங்கள் தந்தையர் நாடல்லவா? யார் இந்த உணர்ச்சிப் பிரவாகத்தை கட்டுப்படுத்த முடியுமென்று நம்பிக்கை கொண்டகாலம் அது.

சுமார் பத்து வருடங்களுக்குமுன் தம்முடைய கட்சிக்கு ஆதரவு தேடிவந்த இன்றைய ஜனுதிபதி- அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முற்றவெளிக் கூட்டம் ஒன்றில் பேச்சைத் தொடர முடியாது மேடையிலிருந்து வெளியேறியது இன்று நினைவுக்கு வருகின்றது.

அதற்குப்பின் ஜனுதிபதியாக ராணுவ பாதுகாப்பில் வந்து மக்களின் வோட்டைக்கேட்டதை நாமொரு சுதந்திரநாட்டில் நடைபெறும் கூட்டமாகக் கருதவில்லை.

இன்று 38வது வருட சுதந்திரக் கொண்டாட்டம். யார் எதனை எங்கு கொண்டாடுவது?

நாம் குறிப்பிட்ட குதூகலம், தமிழ்மக்கள் வேண்டி நின்ற உரிமைகள்பற்றிய கூட்டங்கள். கொண்டாட்டங்கள் இன்று வெறும் பேச்சாகவும், வெறுங்கூட்டமாகவும் வீண் ஆரவாரமாகவும் தோன்றினுல் அதற்கு யார் பொறுப்பு.

கூட்டம்கூடிக் கைதட்டி ஆரவாரம்செய்து மகிழ்ந்து வாழ்ந்ததினுல் உண்மை நெறிதவறிவிட்டதே என்று நினைந்து நினைந்து வெறுப்படையும்நிலை இன்று எம் மக்களைப் பிடித்திருக்கும் மரணவேதனை.

எம்மக்கள் என்று நாம் இங்கு வாழும் தமிழ் மக்களைக் குறிப்பாகக் கருதினுலும், நாட்டின் ஏனைய மக்கள் இன்புற்று வாழ்கின்றனர் என்று சொல்வதற்கில்லை.

ஆங்கிலத்தில் 'Charge of the Light Brigade' என்ற ஒரு பாட்டு சொல்லோசையிலிருந்து பொருள் விளங்கும் வகையில் சுவையாகப் பாடப்படுகிறது.

'எங்கும் பீரங்கி முழக்கம்', வலதிலும் பீரங்கி, இடதிலும் பீரங்கி, முன்னுக்கும் அந்த யமன், பின்னுக்கும் அதுவே, அந்த மரணமென்னும் பள்ளத்தாக்கில் பீரங்கி முழக்கத்தின் பக்கவாத்தியத்துடன் அறுநூறு வீரர் மாண்டனர்'' என்பதே அந்த ஆங்கிலப் பாட்டு.

இலங்கையின் 38வது சுதந்திரதினத்தைக் கொண்டாடவேண்டியவர்கள் திண்டாடும் இச் சுபதினத்தில் நாடெங்கும் பாடவேண்டிய பொருத்தமான பாட்டு இது.

இந்த மரணபாராயணம் தானும் பாடும் வசதி இன்று வடக்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ, மத்தியிலோ இல்லவே இல்லை.

ஊரடங்கின் மத்தியில் வாழ்பவர்கள் எந்நேரமும் மரணத்துக்கு விருந்தினராகும் சுதந்திர 'புருஷர்'.

இன்று இங்கு மட்டுமல்ல, எங்கும் கோடிக்கணக்கான மக்களை ஆளும் உரிமைபெற்று விளங்கும் தலைவர்கள் தத்தளிக்கின்றனர். அல்லலுறுகின்றனர். ஆளும் பொறுப்பை அதிகாரமாக மாற்றிக்கொண்ட கூட்டம் இது.

நானே அரசன் என்னை முடியாது தொன்றில்லை என்ற அகங்காரம் மக்கள் பேரில் எழுந்தபோதும், அது ஜனசக்தியை பிரதிபலிப்பதில்லை. தம்முள் இருக்கும் பகைமையையும் அடக்கி ஒடுக்கி ஆள உண்டான பேராசையையுமே வெளிப்படுத்தும் தனி மனிதனின் தீயசக்தி இது.

முடி ஆட்சி உலகெங்கிலும் கவிழ்ந்ததன் காரணமும் அதுவே; குடியாட்சி என்ற பெயரில் மன்னன் ஆட்சி மாறுவேடம் பூணுகிறது. மக்கள் தம் உரிமைகளை, ஆட்சியின் பங்கினை தாரைவார்த்துக் கொடுக்கின்றனர். தலைவன் இட்டது சட்டம்.

இந்தநிலையில் சட்ட மறுப்பு ஆரம்பித்து போராட்டத்தில் முன்னேறுவது சுதந்திரநாடுகளில் நாம்எங்கும்காணுங்காட்சி. கெரிலா யுத்தம் எல்லாம் மக்கள் ஆட்சியை கவிழ்க்கும் பயங்கரவாதமா?

இடி அமீன் ஆண்ட உகண்டா இன்று யார் கையில் உண்டு?

எனவே மக்கள் என்றுலென்ன? மன்னன் என்றுலென்ன, வெளியே பகை உள்ளது என்றும் அதனை எதிர்த்துப் போராடவேண்டும் என்றும் எண்ணுவது தவருகும். தந்தை - மகன், மாமன் - மருகன், கணவன்- மனைவி, அண்ணன் - தம்பி என்ற பரம்பரை ஆட்சி மக்கள் ஆட்சி ஆகாதென்பதைக் கண்டிருக்கிறேம்.

தனக்குள் இருக்கும் பகையைப் போக்கமுடியுமானுல், மனத்தை ஆளும் தலைவராக விளங்கவல்லவரானுல் மக்களை ஆளமுடியும். மனத்தூய்மையுள்ள பிரஜைகளே சுதந்திரத்தின் சுவையை அனுபவிக்கும் உரிமை உடையவர்கள்.

வெறும்பேச்சிலும் உணர்ச்சியிலும் மகிழ்ந்து காலம் கழித்த நாம் இன்று மனச்சான்றின் வழியில் அடி எடுத்துவைக்க முயல்கின்றேம்.

எமது நாடு, எமது சமூகம், எமது அயலவர், எமது குருபீடம் இவை எவற்றிலும் உண்டாகும் பிணக்கை நாம் தூய மனச்சான்று என்ற அடிப்படையில் [illegible] மானுல் அதுவே சுதந்திரம்!

# "துர்க்காபுர மகளிர் இல்லம்: தமிழ் சமூகம் நன்றி கூறவேண்டும்"

[மாவிட்டபுரம்]

''தமிழ்ச்சமுதாயத்தின்பொக்கிஷமாக இருக்கும் சிறுவர்கள் வருங்காலத்தின் பிரஜைகள். அவர்களை நல்ல பண்புள்ளவர்களாக உருவாக்க உதவும் இந்த இல்லத்தை அமைத்ததற்காக தமிழ்ச் சமுதாயமே நன்றி தெரிவிக்கவேண்டியவர்கள்''.

இவ்வாறுதெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் நிறுவப்பட்டுள்ள மகளிர் இல்லத்தை திறந்துவைத்துப் பேசுகையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கூறினுர்.

16லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி இல்லத்தின் திறப்புவிழாவன்று ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்று திருவுருவப்படங்கள் ஊர்வலமாக மேளவாத்தியம் முழங்க எடுத்துச்செல்லப்பட்டு பிரதிஷ்டைசெய்யப்பட்டன. இதையடுத்து பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ்.அரசாங்க அதிபர் திரு. எம், பஞ்சலிங்கமும், மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு சி. வி. விக்கினேஸ்வரனும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

முதலில் யாழ். அரசாங்க அதிபர் நாடாவைவெட்டி திறந்துவைத்த பின்னர் மாவட்ட நீதிபதி குத்துவிளக்கேற்றிவைத்தார். அடுத்து துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஞாபகார்த்தகல்லை திரைநீக்கம் செய்துவைத்தார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடந்த விழாவில் அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எம் சமுதாயத்தில் சிறுமிகளை நல்ல சைவத்தொண்டர்களாக்கும்இப்படியானஇல்லங்கள் குறைவு. இந்தியாவில் இப்படியான இல்லங்கள் ஏராளமாக உள்ளன. இவ்வில்லம் சைவ ஒழுக்கம்கொண்ட சிறுமிகளை உருவாக்க நல்ல வாய்ப்பிரசாதமாக அமைந்துள்ளது. இப்படியான இல்லம் சிறுமிகளை பண்பாளவர்களாகவும் ஒழுக்கம் உள்ளவர்களாகவும் உருவாக்க உதவும்'' என்ருர்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு சி. வி. விக்கினேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

இன்றைய இக்கட்டான காலத்தில் நாம் எத்தனையோ பக்கத்தை நோக்கவேண்டியுள்ளது. மேலே, பக்கம், நிலத்தின்கீழ் என்று எத்தனையோ பக்கங்களை பார்க்கவேண்டிய நேரத்தில் இப்படியான மகளிர் இல்லத்தை அமைத்தது சாலச் சிறந்தசெயலாகும். இப்படியான காரியம் மக்களால் செய்யமுடியாது. துர்க்கா அன்னையால்தான் முடிந்தது வருங்கால சந்ததிக்கு முன்னேடியாக இது விளங்குகிறது. தமிழ்மக்களிடம் கொடுக்கும் திறன் மங்கியுள்ளது. எடுக்கும் திறன் ஓங்கியுள்ளது. ஆனுல் இந்நிலை மாறவேண்டும்'' என்ருர்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகள் உரையாற்றுகையில்: ''சைவ சமயத்துக்கு இன்று வெற்றித்திருநாள். சமயத்தில் இருந்த பெருங்குறைபாடு இன்று நீங்குகிறது. சமுதாயத்தில் அனுதைக்குழந்தைகள் ஒதுக்கப்பட்டகாலம் நீங்கி இனிசமுதாயத்தில் ஒருமுக்கிய இடம் அளிக்கும் வகையில் இவ்வில்லம் அமைந்துள்ளது'' என்ருர்.

''செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறியதாவது; ''இந்த இல்லத்தை கடந்த 2வருடங்களாக அமைக்க முயற்சி செய்தோம். இதற்கு பொதுமக்களும் வெளிநாடுகளில் அகதிகளாக இருக்கும் எம் இளைஞர்களும், மலேசியாவாழ் பொதுமக்களும் உதவினுர்கள்.

ஆலயங்கள் தனிய வழிபாடு, பிரசாதம் வழங்குவதுடன் நிற்காது குடிமக்களின் பணிகளிலும் ஈடுபடவேண்டும். அதே வகையில்நாம் பல்வேறு துறைகளில் செயல்படுகிறேம்'' என்ருர்.

## தாயுமானவர் பெருமையும் ஈழமக்களும்

திருமறைக்காட்டு இறைவனை சின்னத்தம்பிப் புலவர் மறைசையந்தாதி பாடித்துதித்தார். திருமறைக் காட்டில் வாழ்ந்த கேடிலியப்பபிள்ளை- கெஜவல்லியம்மை தம்பதிகளுக்குத் திருச்சி மலைக்கோட்டைத்தாயுமானசுவாமி அருளால் அவதரித்தவரே தாயுமானவர். இவரின் முன்னேர் யாழ்ப்பாணத்து வரணியிலே பிறந்தவரென்பது இந்து சாதனப்பத்திரிகையாசிரியரும் யாழ். இந்துக்கல்லூரித் தமிழ்ப் பேராசனுமாய் விளங்கிய பண்டிதர் ம.வே. திருஞானசம்பந்தரின் கருத்தாகும். தாயுமானவரின் பெற்றேரில் ஒருவரேனும் ஈழ மண்டலத் தொடர்புடையவராயிருக்கலாம் என நம்பலாம்.

எவ்வாருயிருப்பினும் தாயுமானவர் திருப் பாடல்களில் ஈழநாட்டவர் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தமை நன்கு சிந்திக்கத்தக்கது.

''எல்லோரும் வாழ்க; இன்பமே சூழ்க''என்பது நம்அடிப்படைக் கொள்கைகளிற் சிறந்ததாகும். இதனை ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறென்றறியேன் பராபரமே',எனமொழிந்தார் தாயுமானவர். இம்மொழி போன்ற அரும் பெருங் கருத்துக்களை எல்லாச் சமயத்தவரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலே தாயுமானவர் அருளினுர்.

தாயுமானவரின் உலகளாவிய இன்ப அன்பு நெறியை பரப்பும் பணியிலே ஈழநாட்டுப் பெரு மக்கள் சிறந்த தொண்டாற்றியுள்ளனர் அவர்களுள் முன்னேடியாக விளங்கியவர் 1834- 1879 இல் வாழ்ந்த சேர் முத்துக்குமாரசுவாமியாவர். இவர்;சித்தாந்த சாத்திரமாகிய உண்மை விளக்கத்தை அடியொற்றிச் சிவநடனம் பற்றி உலகம் வியக்கும் வண்ணம் எழுதிய கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் தந்தையாவர். சேர். பொன். இராமநாதன், சேர். பொன் அருணசலம் முதலியோர் தாயுமானவரின் வாழ்விலும் வாக்கிலும் பெரிறும் ஈடுபாடு கொண்டு விளங்கினர்.

தாயுமானவர் சைவசமயி, 'சைவ சமயமே சமயம்''என்றவர் ஆனுல் சமய சமரசவாதி வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னுதவர் அனைத்துச் சமயங்களையும் போற்றியவர். அனைத்துச் சமயங்களும் ''தத் தெய்வம் எம் தெய்வம் என்று எதிர் வழக்கிட நின்ற பெரிய பொருளைப் பணிந்தவர் அனைத்து உயிர்களையும் உலகத்தையும் சமயங்களையும் ஒன்ருக இணைத்துக் காட்டிய தாயுமா

''பருளாய் விநாயகன்''

னவரின் மெய்ஞ்ஞான தத்துவத்தை அகில உலகிற்கும் புலப்படுத்திய ஈழத்தவர்களிலே மற்ருெருவர் டாக்டர் கலாநிதி ஐசாக் தம்பையா ஆவர். இவர் தாயுமானவர் பற்றியும் அவர் தம் பாடல்களின் தன்மை பற்றியும்எழுதிய ஆங்கில நூல் 1925 ல் இங்கிலாந்தில் அச்சிட்டு வெளியிடப்பட்பெற்றது. Psalms of a Saiva Saint என்பது அந் நூற் பெயராகும்.

துன்பமும் துயரமும் வாட்டுகின்ற இனறைய சூழ்நிலையிலே எல்லோரும் இன்புற்றிருக்க வழிகாட்டும் இந்நூலின் பிரதியொன்று பலரும் படித்து பண் பெறத் தக்க வகையில் யாழ்.பொது நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக ஒருவரால் வழங்கப்பட்டிருக்கிறது. பக்தி ஞான நூல்களைப் பயில விரும்புவர் தமக்கு வாய்த்த நேரமெல்லாம் தாயுமானவர் திருப்பாடலை ஓதுவதனுல் எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை விரைவில் வரும்.

## மனிதப்பண்புகளும் அவைபெறும் பாராட்டும்

[யாழ்ப்பாணம்]

''ஒரு மனிதனிடம் அமைந்துள்ள பண்புகளை அறிஞர்களும் பெரியவர்களும் பாராட்டும்போது, உண்மையில் அந்த உயர்ந்த பண்புகளே அவர்களால் பாராட்டப்படுகின்றன. ஒரு இலட்சிய மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதையே அவர்கள் கூறுகிருர்கள்.''

கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பதிலுரை வழங்கிய கலாநிதி நா. சுப்பிரமணியஐயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், ''ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கும் சபைகளில் பேச்சுக்களின் தரம் குறைவாக இருக்கும். பேசுபவர்களின் கருத்துக்கள் சபையிடம் முழுமையாகச் செல்வதுமில்லை. ஆனுல் ஒரு சில அறிஞர்கள் கூடுமிடங்களில் பேசப்படும் விடயங்கள் தரத்தில் உயர்ந்தவையாய் இருப்பதுடன், சபையில் உள்ளவர்களிடம் முழுமையாய்ச் சென்றடையும்'' என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியஐயர் அண்மையில் கலாநிதிப்பட்டம் பெற்றமையைப் பாராட்டு முகமாகமேற்படிவிழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கோயில் நிர்வாகி பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்களின் நல்லாசியுடன் ஆரம்பமான இவ்விழாவிற்குக் கீரிமலைச் சிவநெறிக் கழகச் செயலர் திரு. ச. விநாயகரத்தினம் தலைமை தாங்கினுர்.

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-ம் நாள் நினைவஞ்சலி

**கைதடி செல்வி சிவகௌரி கந்தையா**



தோற்றம்: 24-10-1972
மறைவு: 07-01-1986

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 6-2-86 வியாழக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிரியைகளிலும் காலை 10 மணிமுதல் நடைபெறவுள்ள நல்லூர் ஸ்ரீசத்தியசாயி சமித்தியின் பஜனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

திரு. ஆறுமுகம்-கந்தையா, J. P.
(சிவா பிறின்டேர்ஸ்-கைதடி)
துணைவியாரும், பிள்ளைகளும்.

'சிவஇல்லம்'
கண்டி வீதி,
கைதடி. C 548


எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
சுரேஷ்-நளினி
**ஆஷா**

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும் வரை**

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
HOW SLEEP
THE BRAVE
இலங்கையிலேயே முதல் முதலாக திரையிடப்படுகிறது. காடுகளில் துப்பாக்கிகளுடன் 'அவர்கள்...' மறைந்திருக்கு மர இலைகளுக்குள் 'அவர்களைத்' துளைக்க தயாராயிருக்கும் துப்பாக்கிகள்-திகில்-சஸ்பென்ஸ்கொண்ட தாக்குதல்படம்


# 8000 மாணவர்கள்...

1ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கு'' என்று கோஷமெழுப்பியபடி சென்றனர்.

### ஊர்வலம் சென்ற பாதைகள்

ஊர்வலம் கஸ்தூரியார் வீதி, மின்சாரநிலைய வீதி, ஆஸ்பத்திரி பின் வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக நண்பகல் 12 மணிக்குச் கச்சேரியை வந்தடைந்தது. அச்சமயம் வானத்தில் ஹெலிகொப்டர் ஒன்று சென்றது.

### வழியில் தாகசாந்தி

வழியில் வீடுகள் தோறும் மாணவர்களுக்கு தாகசாந்தியளித்தார்கள். ஊர்வலத்தில் சுமார் 3000 மாணவிகளும் சுமார் 5000 மாணவர்களும் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் முற்பகுதி கச்சேரியை அடைந்தபோது இறுதிப் பகுதி வேம்படிச் சந்தியால் வந்து கொண்டிருந்தது.

### 6-ம் வகுப்பு மாணவர்களும்...

கூடுதலான கல்லூரிகளிலிருந்து உயர்வகுப்பு மாணவர்கள் மட்டுமே கலந்துகொண்ட போதிலும் சில கல்லூரிகளிலிருந்து ஆறும் வகுப்பு மாணவர் முதல் கலந்துகொண்டனர்.

### வரிசையாக மாணவர்கள்

'தேசிய மாணவர் மன்றம்' பொறிக்கப்பட்ட அட்டையை ஏந்தியபடி மன்றப் பிரதிநிதிகள் செல்ல அவர்களைத் தொடர்ந்து யாழ். நகரிலுள்ள சகல கல்லூரி மாணவர்களும் ஊர்வலத்தில் வரிசையாக வந்துகொண்டிருந்தார்கள்.

''மாணவர் சக்தி மாபெரும் சக்தி'', ''கல்வியில் கைவைக் காதே'', ''பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறு'', ''இராணுவ முகாம்களை அகற்று''. ''பள்ளிச் சிறுவர்கள் தீவிரவாதிகளா?'' என்ற கோஷங்களை ஊர்வலத்தில் எழுப்பியபடி சென்றனர்.

சுலோக அட்டைகளையும் மாணவர்கள் ஊர்வலத்தில் கொண்டுசென்றனர்.

### மூன்று மணிநேரம்

உச்சி வெய்யிலில் சுமார் 3 மணி நேரம் சுலோகங்களை எழுப்பியபடி 3 மைலுக்கு மேலாக மாணவர்கள் ஊர்வலமாக வந்த காட்சியை வீதியோரங்களில் நின்ற ஆயிரக்கணக்கான பெற்றோரும் மற்றோரும் தங்கள் ஆதரவு வழங்கினர்.

### மறியல் செய்தனர்

ஊர்வலம் கச்சேரியை அடைந்ததும் மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியபடி மறியல் இருந்தனர். ஊர்வலமாக வந்த மாணவர்கள் கச்சேரியின் இரு முன்வாசல் வழியாகவும் உள்ளே சென்று சுற்றிவளைத்து முற்றுகையிட்டு பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறு குரல் எழுப்பினர்கள்.

கச்சேரி கொடிக்கம்பத்தில் 'தேசிய மாணவர் மன்றம்' என எழுதப்பட்ட கொடியை ஏற்றினர்கள். அருகில் நின்ற இரு கம்பங்களிலும் 'அடுத்த போராட்டம்?' என்று எழுதப்பட்ட இரு சுலோக அட்டைகளைத் தொங்கவிட்டனர்.

### 10 பிரதிநிதிகள் சந்திப்பு

'தேசிய மாணவர் மன்ற'த்தைச் சேர்ந்த எட்டு மாணவர்களும், இரு மாணவிகளும் உள்ளே வந்து மேலதிக அரசாங்க அதிபர் திரு. இராமநாதனைச் சந்தித்துப் பேசினர் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க வந்திருப்பதாகவும் அவர்கள் மேலதிக அரசாங்க அதிபரிடம் தெரிவித்தனர்.

கொழும்பு சென்றிருந்த அரசாங்க அதிபர் திரு. எம்.பஞ்சலிங்கம் வராததினால், மேலதிக அரசாங்க அதிபர் மாணவர்களின் மகஜரை ஏற்கச் சம்மதித்தார்.

### மகஜர் கையளிப்பு

பின்னர் மன்றப் பிரதிநிதிகள் 10 பேரும் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே இராமநாதனுடன் மாணவர் மத்தியில் வந்தபோது அம்மகஜர் அவரிடம் கையளிக்கப்பட்டது.

'இம்மகஜரினால் பலன் கிடைக்காது என்று தெரிந்தபோதும் ஒரு சம்பிரதாயத்துக்காக இதனை மாணவர் சார்பில் கையளிக்கின்றேன்' என்று மன்றப் பிரதிநிதி தெரிவித்தார். மகஜரை ஏற்றுக்கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் இம்மகஜரை மேலதி... காரியிடம் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். [க]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

**அமரர் தர்மலிங்கம் திலகேந்திரன்**
(சுங்க திணைக்களம்)



படைப்பு: 27-03-1951
பறிப்பு: 05-01-1986

பண்ணைக் கடல் வீதியிலே வீடு நோக்கி ஓடி வருகையிலே பாதகனின் குண்டு அடிபட்டு எம்மை எல்லாம் கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இதயத்தை சுக்கு நூறாக்கி, ஆறுத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு கணப் பொழுதில் விண்ணுலகம் எய்தி விட்டீர்கள். எங்கள் அன்புத் தெய்வமே நாங்கள் என்றைக்கும் உங்களுடனேயே இருப்போம். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

7-1-86 அன்று அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், உதவி புரிந்தோருக்கும் குறிப்பாக சுங்க திணைக்கள ஊழியர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.
அரியாலை. C 536

## கைமாறிய பொருள்

26-01-1986ந் திகதி ஞாயிறு அன்று காலை எனது வீட்டுக்கு முன்னால் வைக்கப்பட்ட எனது HERO சைக்கிளை, யாரோ என்னிடம் வந்த கட்சிக்காரரோ, நண்பரோ மாறி எடுத்துக்கொண்டு, தனது துவிச்சக்கர வண்டியை எனது வீட்டு வாயிலில் விட்டுச்சென்றுள்ளார். எனது சயிக்கிளை மாறி எடுத்துக்கொண்டு சென்றவர் அதனை என்னிடம் திருப்பி ஒப்படைத்து தனது சயிக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

க. கேசவன் - சட்டத்தரணி,
'சிவஸ்தான்', நல்லூர், யாழ்ப்பாணம்.
(C 550) போன். 22476.

# விடுதலைப்புலிகள்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வும் மற்றும் இரு போராளிகள் சிறுகாயமடைந்தாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தருமபுரப்பகுதியில் ஒருவாகனத்தில் சொன்றுகொண்டிருந்தவர்களுட்பட 50க்கு மேற்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் என்றும் விடுதலைப் போராளிகளை தாக்கி விரட்ட ஹெலிகொப்டர், விமானங்கள்சகிதம் முன்வந்த இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகள் தடுத்தனர் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''கடந்த மாதம் 30ம் திகதி இரவு 11 மணி தொடக்கம் நேற்று முன்தினம் 2ம் திகதி பி. ப. 4 மணிவரை இராணுவத்தினரை சுற்றி வளைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 'ஸ்கவுட்' கார்உட்பட 6 கவசவாகனங்களில் வந்த சுமார் 200 இராணுவத்தினர் வயல்வெளியில் புதைந்திருந்த ஒரு வாகனத்தை மீட்பதில் ஈடுபட்டிருந்தனர். அச்சமயத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேரடிமோதல் இடம் பெற்றது.

அடுத்த நாள் 31ம் திகதி காலை ஹெலிகொப்டரிலிருந்து உணவுப் பொட்டலங்கள் அங்கு நின்ற இராணுவத்தினருக்குப் போடப்பட்டன. அப்பொட்டலங்களில் பலவிடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து முதலாம் திகதியும் விமானத்திலிருந்து போடப்பட்ட உணவுப் பொட்டலங்களும் தடுக்கப்பட்டன.

2ம் திகதி காலை 11 மணியளவில் அவ்விடத்திலிருந்து 'ஸ்கவுட்' காருடன் இரு கவசவண்டிகளில் [மூன்று வாகனங்கள்] இராணுவத்தினரில் ஒருபகுதியினர் கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டனர். சுமார் 200 யார் தூரம் வந்ததும் விடுதலைப் புலிகள் அவ்வாகனங்களை நோக்கி ரொக்கட் லோஞ்சர்களால் தாக்கினர்கள். அதில் இரு வாகனங்கள் முற்றாகச் சேதமடைந்ததுடன் அதிலிருந்த இராணுவத்தினரில் சிலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். அச்சமயம் சேதமடைந்த இரு வாகனங்களையும் அவ்விடத்தில் கைவிட்டு, காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் அடுத்த வாகனத்தில் போட்டுக் கொண்டு முன்னர் இருந்த இடத்தை நோக்கிச் சென்றனர். நேற்று முன்தினம் 4 மணியளவில் புதைந்திருந்த இரு கவச வாகனங்களையும் மீட்டெடுத்த இராணுவத்தினர், தமது பாதுகாப்புக்கருதி துப்பாக்கி முனையில் நூற்றுக்கணக்கான பொதுமக்களைச் சூழ வைத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து வெளியேறி சேதமடைந்திருந்த இரு வாகனங்களையும் கட்டி இழுத்துக் கொண்டு கிளிநொச்சிமுகாமை நோக்கிச் சென்றனர் பொதுமக்கள்சகிதம்சென்றதால்இராணுவத்தினர் மீதான தாக்குதல் முயற்சி எம்மால் கைவிடப்பட்டு திரும்ப வேண்டி ஏற்பட்டது''. இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[மா]

# கிளிநொச்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் கிளிநொச்சி இராணுவ முகாமிலே நிலைகொண்டுள்ளனர் என்றும் இவர்கள்முகாமை விட்டு வெளியேற முடியாத நிலையில் உள்ளனர் என்றும் தெரிய வந்தது.

இதேவேளை வட்டக்கச்சிப் பகுதியில் இருந்து பிரயாணிகளுடன் புறப்பட்ட வான் ஒன்றைக் காணவில்லை என்றும் தெரியவந்தது.

ஊரடங்குசட்டம் நீக்கப் பட்ட நேற்றுக்காலை 10 மணிக்கு முன்பாக கிளிநொச்சி வட்டக்கச்சி மற்றும் இடங்களில் உள்ள பொதுமக்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு வர முண்டியடித்துக் கொண்டு அகப்பட்டவாகனங்களில் ஏறியதையும் வாகனம் கிடைக்காதவர்கள் கால்நடையாக சாரி சாரியாக ஆனையிறவுப் பக்கமாகச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

### சந்தை கூடியது

திங்கள் காலை கிளிநொச்சி சந்தை கூடியது. குறைந்த தொகையினரே இங்கு காணப் பட்டனர். கிளிநொச்சியில் தொடர்ந்து இரு நாட்களாக மீன், மரக்கறி முதலானவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இது இவ்வாறிருக்க ஊரடங்கிற்கு முன்தினம் வட்டக்கச்சி, இராமநாதபுரம் நிலைமைகளை அறிந்து பாதிக்கப்படும்பொது மக்களுக்கு நிவாரணம்வழங்க சென்றகிளிநொச்சி பிரஜைகள் குழுத்தூதுக்குழுவினரை நோக்கி தாழப்பறந்த விமானம் ஒன்றுதுப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தது. வட்டக்கச்சி பன்னங்கண்டி ஆற்றில் விழுந்து பிரஜைகள் குழுவினர் உயிர்தப்பிக்கொண்டனர்.

பல இடங்களிலும் பாதிக்கப் பட்ட பொதுமக்களை சந்தித்து விட்டு திரும்புகையில் இச் சம்பவம் இடம்பெற்றது எனக் கூறப்படுகிறது.

# பொதுக்கூட்டம்

(வண்ணார்பண்ணை)

எழுவைதீவு மணிவாசகர் சன சமூக நிலையத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம்எதிர் வரும் 9ம் திகதி நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் திரு எஸ். வன்மீகலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலக உத்தியோகத்தர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

# இந்தியா கவலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது விடுதலைப்போராளிகளின் முஸ்தீபுகளைத் தற்காலிகமாகவேனும் தட்டிக் கழிப்பதிலோ இலங்கை ஜனாதிபதியின் கவனம் இருக்கிறது என்பது தெளிவுபடுத்த முடியாத புதிராயுள்ளது என்று 'இந்து' மேலும் எழுதுகிறது.

தமிழ்நாட்டில் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தெரிவித்த கருத்துக்கள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கருத்தையே பிரதிபலிப்பதாகவும் இப்பத்திரிகை மேலும் கூறுகிறது,


கடைசிநேர வரிவிளம்பரம்

**தவறிவிட்டது**

எனது கடவுச்சீட்டு [பாஸ்போட்], கார் அனுமதிப்பத்திரம். கார் பதிவுபத்திரம் முதலியவற்றுடன் எனது கைப்பை யாழ். ஆஸ்பத்திரிக்கருகில் தவறிப்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் 22, இராமையாச்செட்டியார் ஒழுங்கையில் உள்ள யாழ்ப்பாணக் கல்விநிலையத்தில் [சாந்தி படமாளிகை அருகில்] அல்லது அற்புதமனை நவாலி தெற்கு, மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். செ. யோ. இளையதம்பி. [C 554]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாவற்குழி ஊடாக

## போக்குவரத்து இல்லை

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி ஊடாக கடந்த ஒருவாரகாலமாக வாகனப் போக்குவரத்து நடைபெறவில்லை.

வ.பி.போ.ச. பஸ்கள், மினி பஸ்கள், லொறிகள் மற்றும் வாகனங்கள் யாவும் கோப்பாய் ஊடாகவே செல்கின்றன.

நேற்றுமுன்தினம் ஒரு லொறி மட்டும், நாவற்குழி ஊடாகச் சென்றதாகக் கூறப்படுகிறது. சைக்கிள்களும் கோப்பாய் ஊடாகவே செல்கின்றன. நாவற்குழி பகுதியில் கடமையாற்றுகிறவர்கள், கைதடிக்கு சென்று அங்கிருந்து நாவற்குழி செல்கின்றனராம். (க)

# செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்க 'ஈரோஸ்' தயார்

[கொழும்பு]

'ஈரோஸினால்' முல்லைத்தீவில் வைத்து கடந்த மாதம் 18ந் திகதி கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை திருமதி பெனிலோப்ஈவா வில்லிஸை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பதற்கு இலங்கை அரசு மறுத்துள்ளதால், அவரின் விடுதலை தடைப்பட்டுள்ளதாக ஈரோஸ் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; ''வயோதிபரான பெண் என்பதாலும், மனிதாபிமான அடிப்படையிலும் பிரிட்டிஷ் அரசின் கோரிக்கையினாலும், இந்திய அரச அதிகாரிகளின் வேண்டுகோளின்படியும் அவரை விடுதலைசெய்ய முடிவு எடுக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணமாக அவரை இலங்கை அரசிடம் கையளிக்க விரும்பவில்லை. டில்லியிலுள்ள சர்வதேசசெஞ்சிலுவை சங்கத்துடன் இம்மாதம் 28ம் திகதி தொடர்பு கொண்டு, அவரின் விடுதலை பற்றி தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கமும், பிரிட்டிஷ் அரசின் அதிகாரிகளும் இம்முடிவை ஏற்றுக் கொண்டனர். இலங்கை அரசின் நாகரிகமான நடவடிக்கைதான் அவரின் விடுதலைக்குக் காரணமாக இருக்கும். ஈரோஸ் மீது எவ்விதமான பலாத்காரம் எடுக்க முயற்சிக்கப்பட்டாலும் எதிர்விளைவுகள் ஏற்படும். இத் தகவல்கள் பெப்ரவரி முதலாம் திகதி வெளியான 'இந்து' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# "பாவனையாளர்களை திருப்திப்படுத்த வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை இலகுவிலும் நல்லமுறையிலும் பெறக்கூடிய வாய்ப்பை இச் சந்தை அளிக்கும்'' என்று ஆறுகால் மடத் தருகாமையில் வண்-வட மேற்கு பொதுச் சந்தையைத் திறந்து வைத்த நல்லூர்உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். சிவகுருநாதன் கூறினார்.

கொக்குவில் மேற்கு பிரஜைகள் குழு உபதலைவர் திரு. எஸ். நல்லையா தலைமையில் நடந்த இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

''மனித வாழ்க்கைக்கு முதல்தேவை உணவு உற்பத்தியான உணவுப் பொருட்களை மக்கள் வசிக்கும் இடத்தில் வைத்து விற்பனை செய்வது பாவனையாளருக்கு நல்லவசதியை அளிக்கும்.

''ஏதேனும் உதவி என்னிடம்ருந்து தேவைப்படின் அவ்வுதவியை என்றும் புரிய ஆயத்தமாக இருக்கிறேன். இப் பொதுச் சந்தையில் தரமான பொருட்களை நிதானவிலையில் விற்கப்படுவதை சம்பந்தப்பட்டவர்கள் உறுதிசெய்து சந்தையின் வளர்ச்சியை ஊக்குவிக்கவேண்டும்.''

தலைவர் திரு. எஸ்: நல்லையா பேசுகையில் இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு கிராமத்திலும் மக்களுக்குப் பயன்பட பொதுச் சந்தை அவசியமானது என்றார். [க]

# பெண்களுக்கான பயிற்சி

(ஊரெழு)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் மானிப்பாய் காங்கேசன்துறை தொகுதிகளைச் சேர்ந்த பெண்களுக்கான பயிற்சி வகுப்பொன்றை ஆரம்பிக்க விருக்கிறது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி பயிற்சி வகுப்பில் தையல் வேலை, பூவேலை, பன்னவேலை, மனையியல். பிளாஸ்ரிக்கூடை, கதிரை பின்னுதல், பொம்மை செய்தல், சிகை அலங்காரம் போன்றவைகளில் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

17 முதல் 30 வயதிற்குட்பட்ட யுவதிகள் இந்தப் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதாகவும் இலவசமாகவே பயிற்சிகள் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்குத் தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் பயிற்சி நெறிகளைப் போதிப்பதற்கான ஆசிரியர்களும் தேவைப்படுவதாகவும் மேற்படி இளைஞர் கழகச் செயலாளர் திரு. மு. தேவகுமார் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை மீண்டும் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தாற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நாளை புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

அண்மையில் வசாவிளான் பலாலி, தெல்லிப்பழை பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக அச்சம் தெரிவித்து இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

தற்போது அப்பகுதிகளில் சாதகமான சூழ்நிலை நிலவுவதை கவனத்திற்கொண்டு மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக இப் பாடசாலைகளின் நடவடிக்கைகள் பற்றி கவனிக்க அண்மையில் நியமிக்கப்பட்ட இணைப்புக்குழு தெரிவித்துள்ளது.

# விவேகானந்தர் ஜயந்தி

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் ஜயந்தியை முன்னிட்டு பிரார்த்தனை வைபவமும் கருத்தரங்கொன்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சேவாச்சிரமத்தில் நடாத்தப்பட்டது.

சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் இன்றைய சூழ்நிலையில் சுவாமி விவேகானந்தரின் பங்கு என்னும் தலைப்பில் திரு பா. இரகுநாதன், திரு. ச. செந்தூர்ராசா, செல்வி க. யோகராணி ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். ஆசிரியை செல்வி. ஜெ. முத்துக்குமாரு நன்றியுரை வழங்கினார். (ச)

# இன்றைய பலன்!

மாதம்- தை
திகதி- 22 [1986-2-4]
கிழமை- செவ்வாய்
திதி- தசமி பிற்பகல்வரை
நக்ஷத்திரம்- அனுஷம் காலை 7-27ன் மேல் கேட்டை

மேடம்: எதிலும் தயக்க நிலைதென்படும். நண்பர்களும் குறைகூறுவார்கள். பொருளாதாரத் துறையில் மந்த நிலை தென்படும்.

இடபம்; மனம் நிறைந்த சம்பவங்கள் இடம் பெறும் பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். கைவிடப்பட்ட பணவரவும் மீண்டும் கிடைக்கும்.

மிதுனம்: இனந்தெரியாத கவலைகளால் சோர்வடைவீர்கள். வாய்வுப் பதார்த்தங்கள் தவிர்க்கப்படல்நன்று. சகோதரவழியாலும் கவலைதோன்றும்.

கடகம்: திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்கும். சிரமமான காரியங்களை இலகுவாகச் செய்து முடிப்பீர்கள். தங்கள் திறமை சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

சிங்கம்; மகிழ்ச்சி தரும் செய்தியொன்று கிடைக்கும் பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். அறவழிகளிலும் நாட்டம் பிறக்கும்.

கன்னி: மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபடவும். எச்சந்தர்ப்பத்திலும் அவசரப் போக்கைத் தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணங்களை இன்று பின்போடுவது நன்று.

துலாம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் உண்மையும் இன்று ஊமையாகிவிடும். உடல்நலமும் இன்று பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்: தொழில் புரியுமிடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள்.

தனுசு: கணிப்புத் திறமையால் பெரும்புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும்.

மகரம்: உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்தியசெலவும் அதிகரிக்கும். எண்ணிய கருமத்திலுல் தடைபேற்படும்.

கும்பம்: வாகனம் செலுத்துவோர் இன்று நன்மதிப்பு பெறுவர். தாய்வழி தனவரவிற்கும் இடமுண்டு. முன்னேற்றகரமான தினம்.

மீனம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் காலடியில் கிடைக்கும். நண்பர் ஒருருக்குக்கை கொடுத்து உதவுவீர்கள்.

# திருமலை

# "ஒற்றுமையை நிலைநாட்ட சமயங்கள் தவறின"

## வின்சன் பற்றிக்அடிகளார் கருத்து

[யாழ்ப்பாணம்]

''ஒற்றுமையை நிலைநாட்ட சமயங்கள் தவறியதனாலேயே மாக்ஸிச சிந்தாந்தம் மக்களிடையே பரவி மககளுக்கு நல்வழி காட்டுவனவாகவே அமைந்தது'' என்று நான் பத்திரிகை ஆசிரியர் வண.வின்சன் பற்றிக் அடிகளார் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போது கூறினார்.

ஸ்ரீ கலைமகள் அறிவொளி கலை இலக்கிய கழகத்தின் தலைவர் ஐ.வரதராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அடிகளார் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது. மக்கள் சுரண்டல் அற்ற சமூக அமைப்பில் வாழவேண்டும். தீமைகள் அநீதிகள் அற்ற நல் வாழ்க்கை வாழவேண்டும் என்பதனையே சமயங்கள் போதிக்கின்றன. அநீதிகளை சமயங்கள் ஏற்றுக்கொள்வதில்லை அநீதிகள் நிறைந்து காணப்பட்டால் அவைகளைச் செய்யத்தூண்டும் மக்கள் விரோதிகளைஒழிப்பது நியாயமானதே. இப்படியான நிகழ்வைத்தான் இந்து மதத்தில் கண்ணன் அர்ச்சுனனூடாகச் செய்தார். மனித அழிவுகள் ஏற்படும்போது அவற்றை எந்தச் சமயமானாலும் தடுக்கவேண்டும்.

இப்படியான அழிவுகள்உலக யுத்த காலங்களில் நடந்தன' இவற்றை அன்று சமயங்கள் கண்டிக்கத்தவறின எனவே மாக்ஸிச தத்துவங்கள் மக்கள் மத்தியில் பரவின. சுரண்டலற்ற சமுதாய அமைப்பை மார்க்ஸிசம் ஏற்படுத்துகிறது. சமயங்களும் அவ்வாறுன மனித சமூகத்துக்கு நன்மை தரும் சுரண்டலற்ற மக்கள் ஒன்றுபட்டு வாழும் அமைப்பையே விரும்புகின்றன.

எனினும் மனித நேயத்துக்குத்தடையாக உள்ளது. நான் எனும்கோட்பாடே. மற்றவர்களைநேசிக்கும் தன்மை எம் ஒவ்வொருவரிடமும் நிறைந்து காணப்பட்டால் அநீதி அக்கிரமங்ள் தலைதூக்கமாட்டாது என்றார்.

எழுத்தாளர் திரு. இ அரசகேசரி தமதுரையில் ''இன்று நமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குக் காரணம் மக்களிதிம் ஒற்றுமை இல்லாமல் இருப்பதே. சமயங்கள் போதிக்கும் சமத்துவம் என்ற தத்துவம் மக்களிடையேமலர வேண்டும். இவைதானக மக்களிடம் ஏற்படப்போவதில்லை. இதற்கான பணியில் நாம் எல்லோரும் ஈடுபடவேண்டும்'' என்றார். கழக உப தலைவர் திரு. சிறீநன்றி கூறினார். [ஐ]

# புதிய பாடம் அறிமுகம்

[யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு முதல் ஆண்டு ஒன்பதில் வர்த்தகமும் கணக்கியலும் ஒரு பாடமாக சகல கல்லூரிகளிலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது அழகியற் கல்விக்கு மாற்றுப் பாடமாகவே இப்பாடம் புகுத்தப்பட்டுள்ளது.

பாடவிதான சபையின் இச் சிபார்சை சுற்றறிக்கை மூலம் யாழ். கல்வித்திணைக்களம் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளது [ச]

# இலவச சிகிச்சை

[உடுவில்)

உடுவில் தெற்கு சத்தியபுரத்திலும், சண்டிலிப்பாயில், உள்ள கிறிஸ்தவ தொடர்புகள் நிலையத்திலும் கிறிஸ்தவ சபையினரின் ஆதரவில் இலவச வைத்திய சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன-

உடுவில் தெற்கு சத்தியபுரம் நிலையத்தில் பிரதி திங்கட்கிழமைகளில் மாலையிலும் பண்டிலிப்பாய் கிறிஸ்தவ தொடர்புகள் நிலையத்தில் பிரதி வியாழக்கிழமை மாலையிலும் இவ்விலவச வைத்திய சேவைகள் நடைபெறுகின்றன.

மானிப்பாய் மெமோரியல் வைத்தியசாலை டாக்டர்களான திரு. விஸ்வலிங்கம், திரு. தயாளன். அம்பலவாணர் ஆகியோரும் மேற்படி வைத்தியசாலையை சேர்ந்த தாதிமார்களும் இச் சேவையில் உற்சாகமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# கலை நிகழ்ச்சிகள் ரத்து

[புங்குடுதீவு]

புங்குடுதீவு கிழக்கு இந்து இளைஞர்கள். மகா சிவராத்திரியை யொட்டி வருடா வருடம் நடாத்தி வரும் கலை நிகழ்ச்சிகள் அனைத்தையும் இவ்வருடம் ரத்துச் செய்வதென திரு. மகாலிங்கம் தலைமையில் கூடிய செயற்குழு தீர்மானித்துள்ளது.

# கவிதாநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்களின் தயாரிப்பான 'நாடிருக்கும் நிலைமை தன்னில்' என்னும் கவிதா நிகழ்வு சவிஞர் இளங்கம்பபாரதியின் நெறிப்படுத்துகையுடன் சிறப்பாக நடைபெற்றது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி பார்வையாளர்களது பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

88 AUG.
A/L கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள்
ஆரம்பம்: 05-02-1986
(புதன் 4-00)
NIRU TUITION CENTRE
STATION ROAD, KONDAVIL.
(கிளை நிறுவனம்: கொக்குவில்)
(A186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரான்ஸ்போமர்' அபகரிப்பு

(யாழ்ப்பாணம்).

யாழ். கொழும்புத்துறை வீதியில் உள்ள கணக்கர் சந்தியில் அமைந்துள்ள யாழ் மாநகர சபையின் உப மின்நிலயத்தில் 'ரான்ஸ்போமர்' கள் இனந்தெரியாத நண்பர்களினல் நேற்றுமுன்தினமிரவு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

முப்பதுக்கு மேற்பட்ட இளைஞர் கோஷ்டி ஒன்று இந்த 'ரான்ஸ்போமர்' களை லொறியில் ஏற்றிச்சென்றுள்ளது. இந்த 'ரான்ஸ்போமர்' கள் இயங்காத நிலையில் இந்த உப மின்நிலயத்தில் இருந்தனவாம். (ஐ)

# "கூட்டுறவுச்சங்கங்கள் அபிவிருத்திப் பணியிலும் ஈடுபடவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்ச்சிச் சேவையோடு மட்டும் நின்றுவிடாது அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டு, அவ்வாறே அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்ட நிலை மாறி, இன்று நுகர்ச்சிச் சேவையை மட்டும் திறம்பட நடத்தினலே போதுமானது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை மிகவும் வேதனைக்குரியதாகும்.''

இவ்வாறு கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் முதற்பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

சங்கத்தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில்அவர் மேலும்பேசுகையில், ''அங்கத்தவர்களின் நலன் பேண ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கங்கள் காலப்போக்கில் சமூக மாற்றத்திற்கேற்ப மக்கள் அனைவரினதும் நலன் கருதிச் சேவையாற்றும் மக்கள் இயக்கமாக மாறிச் செயற்படவேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டது. இயக்குநர் சபையின் பதவிக்காலம் அதிகரிக்கப்பட்டும் உபவிதி மாற்றப்பட்டு பங்குப்பணம் அதிகரிக்கப்பட்டும் ஏற்பட்டுள்ள இரு மாற்றங்கள் ஜனநாயக ஆளுமை உறுதியுடையதாகவும் வலுவுடையதாகவும் கூட்டுறவுச் சங்கங்களைத் திறம்பட நடாத்துவதற்கு காலாக அமைந்தன. இப்பாரிய இரு மாற்றங்களையும் முதன்மையாகவும் முழுமையாகவும் ஏற்று இச்சங்கம் நடைமுறைப் படுத்திய நிலையில் மூன்ருவது தடவையாகஇன்றைய இயக்குநர்சபைத்தேர்தல் நடைபெறுகின்றது'' எனக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு மு. கந்தையா, தலைமை அலுவலகக்கூட்டுறவுபரிசோதகர் திரு. இராஜசிங்கம் மற்றும் பல கூட்டுறவுப்பரிசோதகர்களும் கலந்துகொண்டனர்.

இயக்குநர்சபைத் தேர்தலின்போது கீழ்க்காண்போர் தெரிவாகியுள்ளனர். திரு. த. சிதம்பரப்பிள்ளை (தலைவர்), திரு. செ. சதானந்தன் (உப தலைவர்), திரு. சி. மாணிக்கவாசகர், திரு. மு. கதிரவேற்பிள்ளை, திரு. சி. சிவராமலிங்கம், திரு. மு. கந்தப்பு (மன்னவன்), திருமதி பு. சபாநாயகம் உறுப்பினர்கள் ஆவர்.

# உணவுக் களஞ்சியங்களில் காவலாளர் தட்டுப்பாடு!

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு இலாகாக்களஞ்சியங்களில் காவலாளர் தொகை குறைந்து வருவதாகவும், காலியான இடங்கள் நிரப்பப்படாத நிலை தொடர்ந்திருந்து வருவதாகவும், அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் இது தொடர்பாக எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ''கடந்த காலங்களில் யாழ். மாவட்டட் உணவுக் கட்டுப்பாட்டுக்கு பிரிவின் களஞ்சியங்களில் 65 மேற்பட்ட நிரந்தர காவலாளிகள் கடமையாற்றி வந்தனர். இப்பதவியிலிருந்து ஓய்வு பெற்ற சுமார் 25 பேரின் இடங்கள் தொடர்ந்து பல காலமாக நிரப்பப்படாத நிலையில்இருந்து வருகிறது. இதனல் கடமையாற்றும் காவலாளர்களுக்கு பல இடையூறுகள் இருந்து வருகின்றன காவலாளர்களாக கடமைக்கு அமர்த்துபவர்களிலிருந்து நிரந்தர காவலாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்.

# செண். ஜோன் அம்புலன்ஸ் புதிய ஏழு அம்சத்திட்டம்

(பண்டத்தரிப்பு)

சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் கொழும்புத் தலைமைப்பீடம் அண்மையில் வெளியிட்ட ஏழு அம்ச வேலைத்திட்டத்தை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை படையின் புதிய வடபிராந்திய ஆணையாளராக நியமனம் பெற்றுள்ள டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி மேற்கொண்டுள்ளார். இது தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். லங்கா ஆயுர்வேதக்கல்லூரி மண்டபத்தில் கடந்தவாரம் டாக்டர் இன்னுசித்தம்பி தலைமையில் நடைபெற்றபோது இந்த ஏழு அம்சத்திட்டம் பற்றி படையின் உத்தியோகத்தர்களுக்கு விளக்கிக்கூறப்பட்டது.

கைத்தொழிற்துறையில் ஈடுபட்டவர்களுக்கு சுயபாதுகாப்பும் சுகாதார பயிற்சி பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் பொதுச் சுகாதாரம், நாட்டின் தற்போதைய நிலையில் அவசர நேரங்களில் தேவையான முதலுதவி சிகிச்சைகளை வழங்குதல், இரண்டாயிரமாவது ஆண்டில் வீட்டுக்குக்கொரு வருக்காவது முதலுதவிப் பயிற்சி பெற்றிருத்தல், வீடமைப்புத்திட்டங்களிலுள்ளவர்களுக்கு முதலுதவிப் பயிற்சியளித்தல் தேசிய இளைஞர் சேவை மன்றங்களுடன் இணைந்து செயற்படுதல், அம்புலன்ஸ் வாகன சேவைகளை நடாத்துதல் ஆகிய மேற்படி ஏழு அம்சததிட்டங்கள் பற்றி இக்கூட்டத்தில் விபரித்துக் கூறப்பட்டது.

# பெரியார் துரையப்பா மனதில் நிகழ்ந்த உருமாற்றம் மகாஜனுவாக உயர்ந்தது

[யாழ்ப்பாணம்]

மகாஜனக் கல்லூரிஅமைக்கப்பட்டதனுலும் அதன் வளர்ச்சியாலும் தெல்லிப்பழையைச் சேர்ந்தசில கிராமங்கள் உயர் நிலைக்கு வந்தன, துரையப்பா பிள்ளை அவர்களது மனதில் நிகழ்ந்த ஒரு உருமாற்றமே மகாஜனுவாக உயர்ந்தது''

இவ்வாறு குரும்பசிட்டியில் மதி அக்கடமி-மகவம் சார்பில் நிகழ்ந்த பொங்கல் விழாவில் பவள விழாக் காணும் மகாஜனக்கல்லூரியின் பாரம்பரியம் பற்றிப்பேசிய மயிலங்கூடலூர் பி. நடராஜன் குறிப்பிட்டார்.

பொங்கல் தினத்தன்று மாலை திரு. வேல்அமுதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. இராசரத்தினமும் திருமதி இராசரத்தினமும் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டனர்,

வடமாநிலக் கல்வியதிகாரி கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை திருவள்ளுவர் படத்துக்கு மலர்மாலை சூட்டி ஆசியுரை வழங்கி விழாவை ஆரம்பித்து வைத்தார். மகாஜனக்கல்லூரியை வாழ்த்திப் புலவர் ம.பார்வதிநாதசிவம் புாடிய கவிதை, தென்மயிலை க, சிதம்பரநாதனுல் பாடப்பட்டது.

மகாஜனக் கல்லூரியின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ள கல்விமான் க. நாகராசா வாழ்த்தியும் பாராட்டியும் உதவி அரசாங்க அதிபரும் திரு. சி. கனகசுந்தரம் திரு. மு. சிவராஜாவும் பேசினர்

'தைப்பொங்கல் ஒரு பண்பாட்டு நோக்கு' என்ற தலைப்பில் உரையாற்றிய திருமதி கோகிலா மகேந்திரன் ''சூரியசக்திமனித வாழ்க்கையில் சூரிய அடுப்பு, சூரியக்கலம், கிருமி அழிப்பு, நீர்மின் உற்பத்தி, காற்றுலை, தாவர ஒளித்தொகுப்பு, உப்புத் தயாரிப்பு. உணவுத்தயாரிப்பு, உலர்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுவதால் சூரியன் மனிதர்களால் தெய்வமாக வழிபடப்பட்டான்'' என்று கூறினர்

தமிழ்த் தாய் வணக்கத்துடன் விழா முடிவு பெற்றது.

# தீவுப்பகுதி ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சேவை முன்பயிற்சியை முடித்துக் கொண்ட ஊர்காவற்துறைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள கஷ்டப்பிரதேசங்களான தீவுப்பகுதிகளில் கடமையாற்ற விரும்பின் அவர்கள் கல்விச்சேவை ஆணைக் குழுவுடன் அல்லது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துப் பொதுச் செயலாளர் த. மகாசிவத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகுதியில் சேவை முன் பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு வெளிமாவட்டங்களில் நியமனம் கிடைத்திருப்பின் அக்கடிதத்தையும், ஊர்காவற்றுரைத் தொகுதியில் வசிப்பதற்கான உதவி அரசாங்க அதிபரின் அத்தாட்சிக் கடிதத்தையும் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

கல்விச்சேவை ஆணைக்குழு திரு. எம். ஏ. ஏச். ஆரியரட்ணுவின் பணிப்பில் இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

# சிவநெறிக்கழகம் நடத்தும் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

கீரிமலை சிவநெறிக் கழகத்தினர் பாடசாலை நிதியில் நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளை நடாத்தவுள்ளனர். தெரிநிலைப் போட்டிகள் இம்மாதம், 15 ம், 17 ம், 22 ம், 23 ம், 24 ம் திகதிகளில் நடைபெற்று இறுதிப் போட்டி அடுத்தமாதம் 2ம் திகதி கீரிமலையில் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் ச. விநாயகரத்தினம், சிவநெறிக் கழகச் செயலர், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை எனும் விலாசத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொண்டு விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

## சைவசமய...

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல பிரிவினருக்குமான பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 10ம் திகதியாகும். ஒவ்வொருபிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும், 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவற்களுக்கு சான்றுப் பத்திரங்களும், மார்ச் மாதம் 8ம் திகதி சிவராத்திரி தினம், மாலை, மேற்படி கோவிலில் வைத்து வழங்கப்படும் என்றும் பரீட்சை செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த ஏழு அம்சத்திட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களும், யாழ்மாவட்டத்திலுள்ள 10 தேர்தல் தொகுதிகளுக்கும் பொறுப்பான உத்தியோகத்தர்களும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

# 'போட்டிகள் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வளர்க்கும்'

[புங்குடுதீவு]

''மாணவர்கள் மத்தியில் கல்வி, பேச்சு சம்பந்தமான போட்டிகளை உருவாக்குவதன் மூலம் அவர்களது திறமையை வெளிக்கொண்டு வரலாம். போட்டிகளில் கலந்துகொள்ளும் போது அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். வீரத்தையும் வினைத்திறனையும் காட்டும் போட்டிகள் தமிழர்களின் வாழ்வில் பலநூறுண்டுகளுக்கு முன்பே நடைமுறையில் இருந்து வந்துள்ளன. முரட்டுக்காளைகளை அடக்கும் காளைகளுக்கு தம் கன்னியரை கடிமணம்செய்து வைக்கும்முறை பண்டைக் தமிழரின் பண்பாட்டோடு ஊறிஇருந்தது'' இவ்வாறு சட்டத்தரணி எஸ், கே. மகேந்திரன் ஊரைதீவு சிறுவர் பாடசாலை, ஊரைதீவு சனசமூக நிலைய தளியார் போதனையகம் போன்றவற்றின் மாணவர்களுக்கிடையே நடந்த தகுதிகாண் பரீட்சையில் தேர்வடைந்தோருக்கும் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டி பேச்சுப்போட்டி என்பவற்றில் வெற்றி பெற்றோருக்கும் பரிசில்களை வழங்கிப்பேசுகையில் கூறினர்.

ஊரைதீவு தமிழ் மாதர் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்த இவ்வைபவத்துக்கு கழகத் தலைவி திருமதி சந்திராகோபால் தலைமை தாங்கினர் பரிசில்களை மேற்கு ஜெர்மனியிலுள்ள ந. கோபாலபிள்ளை அன்பளிப்புச் செய்திருக்கிறர்.

# இளம் குடும்பஸ்தர் மர்ம மரணம்

[எம். ரி. சந்திரகுமார்]

மீன் வியாபாரம் செய்து குடும்பம் நடாத்திவரும் இரு பிள்ளைகளின் தந்தையான இளம்குடும்பஸ்தர் ஒருவவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குருநகர் பகுதியில் நடைபெற்றுள்ளது. ஆசீர்வாதம் சூசை மரியதாஸ் (36 வயது) என்பவரே மர்மமானமுறையில் கொலைசெய்யப்பட்டவராவார்.

யாழ் சட்டவைத்திய அதிகாரி டாக்டர். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார் மரணவிசாரணைகளை யாழ். பதில் நீதவான் திரு. ஏ. அன்ரனி நடத்தினர். கொலைசெய்யப்பட்டவரின மனைவி திருமதி ஜெனேவா சூசைமரியதாஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: கொலைசெய்யப்பட்டவர் எனது கணவர். மீன்வியாபாரம் செய்துசீவியம் நடாத்திவரும் எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. எனது கணவர் தினசரி குடிப்பழக்கம் உடையவர்.

''சம்பவதினமிரவும் குடிபோதையில் வீட்டில் இருந்த அவர் தனது மூத்த சகோதரனை வின்சன்ட் மரியதாஸ் என்பவர் தன்னை இருதினங்களுக்குமுன்னதாகஅவமதித்து பேசியதாகவும் அவரை இன்று கொலை செய்யப்போவதாக கூறி மதுவெறியில் என்னையும் இழுத்துக்கொண்டு வின்சனின் வீட்டுக்கு சென்ருர். நானும் பயத்தால் கணவனுடன் சென்றேன்.

''வின்சன்ட் வீட்டுக்குச் சென்ற அவர் வின்சனை பல வாருகஏசி அவரின் கரத்தைப் பிடித்துஇழுத்து உன்னைஇன்று கொலை செய்யப்போகிறேன். எனக்கூறிய வண்ணம் தெரு

[8ம் பக்கம் பார்க்க]

## மனித...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐயாவைப் பாராட்டிப் பேசிய திருமதி கோகிலா மகேந்திரன்,

உலகில் அறிவாளிகள் பலர் உண்டு. ஆனல் மனிதர்கள் குறைவு. மனிதனகப் பிறக்கிற ஒவ்வொருவரும் அதிமனிதனக இருக்கவேண்டும் என்கிற இலட்சியத்தோடு வாழவேண்டும். அதற்கான களம்தான் இந்த உலகம். அதற்கான வாய்ப்புத்தான் இந்தப் பிறவி. அந்த வாய்ப்பினை ஐயா நல்லமுறையில் பயன்படுத்தி நல்ல மனிதராக வாழ்கிருர். சமயஅறிவும் முற்போக்குச் சிந்தனையும், சமதர்மக்கொள்கையும், இளைஞர்களை ஒத்தசிந்தனையும் உடைய அவருக்கு இப் பாராட்டு மிகவும் பொருத்தமானதே'' என்று குறிப்பிட்டார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் சைவப்புலவர் செல்லத்துரை தமது பாராட்டுரையில், ''கலாநிதிகள் ஒரு குறிப்பிட்டதுறையில்தான் ஆற்றல் மிகுந்தவர்களாய் இருப்பது வழமை. ஆனல் ஐயா படைப்பிலக்கியம், விமர்சனம், சமய அறிவு, சமயப் பேச்சாற்றல் போன்ற பல்வேறு விடயங்களில் சிறப்புற்று விளங்குகின்ருர்'' என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# ஜனாதிபதி-இ. தொ. கா. சந்திப்பு

[கொழும்பு]

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், இ. தொ. கா. தலைவருமான திரு. தொண்டமான், இ. தொ. கா. செயலாளர் திரு. எம் எஸ். செல்லச்சாமி ஆகியோர் நேற்று சந்தித்து மலையகப் பிரச்னை குறித்து கருத்து பறிமாறிக் கொண்டனர்

இச்சந்திப்பில் சட்டம் ஒழுங்கு என்பவற்றை தொழிலாளர் மத்தியில் நிலைநிறுத்த இ. தொ. கா. பாடுபடும் என்று உறுதியளிக்கப்பட்டது.

பொலிசார் நகரப்பகுதிகளில் சமாதானம் பேணும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் இ. தொ. கா. தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில் அமைச்சர் லலித் அத்துலத்முதலி, ஹமீட் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர். இன்று இ. தொ கா. பிரதிநிதிகளை இ. தொ. கா. தலைவர்கள் சந்திக்கவுள்ளனர்.

ஊரடங்குச்சட்டம் கினிகத்தனைக்கும் நேற்றுப் பிற்பகல் 3 மணி முதல் இன்று காலை வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஹட்டன், பதுளை ரயில் சேவைகள் 48 மணிநேரத்துள் ஆரம்பிக்கப்படக்கூடிய சாத்தியமில்லை என்று ரயில் சேவைப் பகுதி அறிவித்துள்ளது.

# 'தாறுமாறாக' வந்த பாடப்புத்தகங்கள்!

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென கொழும்பில் இருந்து புகையிரதமூலம் அனுப்பி வைக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் யாவும் 'குப்பைகள்' போன்று தாறுமாறாகக் கிடக்கக் காணப்பட்டன.

யாழ். புகையிரத நிலையத்துக்கு நேற்று வந்தடைந்த இப் பாடப் புத்தகங்கள், வகுப்பு வகுப்பாக ஒழுங்கற்று இருப்பதனால் இவற்றை ஒழுங்கு படுத்துவதற்கு சில நாட்கள் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இப் புத்தகங்களை கல்விச் சேவைகள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது. (ஐ)

# பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் 'சலாம்ஸ்' லொறி மீண்டும் கடத்தல்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து பல லட்ச ரூபா பெறுமதியான பொருட்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிவந்த லொறி இயக்கச்சியில் வைத்து நேற்றுக்காலை 10 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டுள்ளது.

யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள 'சலாம்ஸ் போக்குவரத்து நிறுவனத்'துக்குச் சொந்தமான லொறியே கடத்தப்பட்டது.

வடபகுதியிலுள்ள 5 தொழிற்சாலைகளுக்குரிய பொருட்களும், மற்றும் தனியார் வர்த்தகர்களின் உணவுப் பொருட்களும், வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்டவையும் இவற்றில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

லொறிச் சாரதி, கிளினர் மற்றும் இருவரையும் இறக்கிவிட்டு, பொருட்களுடன் கடத்திச் சென்றதாகவும், இதற்கு முன்னரும் இருதடவை இந்த லொறி பொருட்களுடன் கடத்தப்பட்ட போதிலும் ஒரு பகுதிப் பொருட்களுடன் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, [மா]

# மன்னாரில் பஸ் சாரதி கடத்தப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

மன்னார் இ. போ. ச டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி எட்வின் என்பவர் நேற்றுக்காலை டிப்போ வாசலில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப் பட்டுள்ளார். இவர் நீர் கொழும்பைச் சேர்ந்தவர்.

[மா)

# வசாவிளான் மகாவித்தியாலயம் 5-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதிகளில் சென்றமாதம் 25-ம், 26-ம் திகதிகளில் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் எதிரொலியாக 27-ம் திகதி மூடப்பட்ட வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இம்மாதம் ஐந்தாம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளது [ஐ]

# பிரார்த்தனை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரின் கூட்டத்தில் இப்பிரார்த்தனையை இம்மாதம் பதின் மூன்றும் திகதி நடத்துவதென்றும், இதற்கு சகல மக்களிடமும் ஆதரவு திரட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நேற்று நடந்த கூட்டத்தில் பிரஜைகள் குழுவினர், அரசாங்க ஊழியர்கள், வர்த்தக சங்கத்தினர், அன்னையர் முன்னணியினர், யாழ். மாநகர சபை ஊழியர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும் கலந்துகொண்டனர். [க]

# தென்பகுதி சவர்க்காரம்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சவர்க்காரங்களை இன்று முதல் மாணவர்கள் பகிஷ்கரிப்பதுடன் வீட்டிலுள்ளவர்களையும், அயலவர்களையும் தென்பகுதிச் சவர்க்காரங்களைப் பகிஷ்கரிக்கச் செய்வதுடன், பிரசாரத்தில் ஈடுபடவேண்டும்''.

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று நண்பகல் கூடிய கல்லூரி மாணவர்கள் மத்தியில் பேசிய தேசிய மாணவர் மன்றத்தைச் சேர்ந்த மாணவ பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்.

மன்றத்தின் யாழ். இந்துக் கல்லூரி மாணவ பிரதிநிதி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவ பிரதிநிதி கூறியதாவது:-

''தொழிலாளர்களுக்கு ஒரு தொழிற்சங்கம் இருப்பது போல் மாணவர்களுக்கும் ஒரு மன்றம் இருப்பது அவசியம். மாணவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கவேண்டும். எவரும் மாணவர்களைக் கருவியாக்கி, தங்கள் நன்மைகளை அடைவதற்கு இனிமேல் இடம் கொடுக்கக்கூடாது. இப்படியான மாணவர் போராட்டங்கள் தொடரவேண்டும்''.

வேம்படி மகளிர் கல்லூரிப் பிரதிநிதி பேசுகையில்; அகிம்சைப் போரில் ஈடுபட்டுவரும் எம்மை வேறுநிலைக்கு அரசு தள்ளியிருப்பதாகவும் அந்த நிலைக்கும் மாணவிகள் தயார் என்றும் கூறினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவ பிரதிநிதி பேசுகையில்; போராட்டங்களுக்குத் தொடர்ந்தும் மாணவர் ஆதரவு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யாழ் இந்துக் கல்லூரி மாணவ பிரதிநிதி பேசுகையில்; மாணவர்கள் இங்கு உற்பத்தியகும் பொருட்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தென் பகுதிப் பொருட்களை முற்றாக நிராகரிக்க முடியும் என்றும் கூறினார்.

மானிப்பாய் மாணவ பிரதிநிதி பேசுகையில்: ஒவ்வொரு இடங்களிலும் மாணவர்கள் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிவருவதாகவும், இதனைத் தடுக்க மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடவேண்டும் என்றும் கூறினார்.

தேசிய மாணவர் மன்றத்தில், எந்தப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் அங்கம் வகிக்கலாம் என்றும், யாழ். பல்கலைக் கழக மாணவர் அவைக்கும் இம்மன்றத்திற்கும் தொடர்பு இல்லையென்றும், ஆனால் பல்கலைக்கழக மாணவரும் இம் மன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார்கள் என்றும் மன்றப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

கொன்வென்ட் கல்லூரி மாணவி நன்றி தெரிவித்தார். [க]

# இளம்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

விற்கு கொண்டுவந்தார். தெருவில் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து உருண்டு புரண்டு சண்டையிட்டனர். நான் பயத்தால் அவ்விடத்தில் இருந்து விலகி சில யார் தூரத்தில் நின்றேன்.

''எனது கணவர் சண்டையின்போது கையில் கூரிய ஆயுதமொன்றை வைத்திருந்தார். சிறிது நேரத்தில் கணவரின் மார்புப்பக்கத்திலிருந்து இரத்தம் பாய்ந்துகொண்டிருப்பதை கண்டு ஐயோ என கூக்குரலிட்டேன். அயலவர் ஒருவரும் உதவிக்கு வரவில்லை. ஓடிச்சென்று வானொன்றைப் பிடித்துவந்து அதில் எனது கணவரை ஏற்றிகொண்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தேன். அங்கு எனது கணவர் இறந்துவிட்டதாகக் கூறினார்கள்.''

வின்சன் ஒரு நோயாளி என்பதால் அவர் தனது கணவரை கொலைசெய்திருக்க மாட்டார் என்று தெரிவித்த அவர் தனது கணவன் எவ்வாறு கொலை செய்யப்பட்டார் என்ற விபரமும் தனக்கு தெரியாது என்றார்.

கொலையுண்டவரின் இளைய சகோதரனின் மனைவி திருமதி மேரி அனற் கிறீஸ் மரியதாஸ் என்பவரும் சாட்சியமளித்தார். சாட்சியங்களின் முரண்பாடுகள் காணப்பட்டதையடுத்து தொடர்ந்தும் பொலிசாரை விசாரணை செய்யுமாறு உத்தரவிட்ட பதில் நீதவான் ஏ. அன்ரனி இம்மரணம் கொலைஎன்று தீர்ப்பளித்தார். [ச]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389.
2-126.

# மரண அறிவித்தல்

## கந்தையா தம்பிப்பிள்ளை - கொட்டடி

கந்தையா தம்பிப்பிள்ளை - கொட்டடி, (உரிமையாளர், யாழ். கூல் பார், இல 7, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்) காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மு. பூபதியம்மா, விமலா தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ச. முத்துக்குமாரு, சி. மோகனசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இல 50/25, வயிரவர் கோவில் ஒழுங்கை, கொட்டடியில் இன்று (04-02-86) காலை 10·00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்; சி. மோகனசுந்தரம்,
மு. இரகுநாதன்.

(C 5?7)

## விஞசி சிங்காரம்

திரு. விஞசி சிங்காரம் காலமாகிவிட்டார். இவர், மேரிக்கிறேஸ்சின் அன்புக் கணவரும், விஜயகுமார் [ஜேர்மனி], ஜெயசிலி [பிரான்ஸ்] ஜெயரூபி, சுரேந்திரன், ஜெயராணி, ஜெயகுமாரி ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவக்கொழுந்து, பார்வதி, சின்னம்மா, திரவியம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் மரண ஆராதனை (இன்று) 4-2-1986 பிற்பகல் 3-30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நடைபெறும்.

7/1, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்.

(C 549)

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் 383/7, நாவலர் ஒழுங்கையைச்சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் (Retired Chief Clerk, Hospital Clerical Service) காலமானார். இவர் காரைநகர் களபூமியைச்சேர்ந்த கார்த்திகேசு சின்னத்தம்பியின் சிரேஷ்ட புத்திரரும், லீலாவதியின் அன்புக் கணவரும், ஜெயசீலன் [U. K.], சிவபாலன் [Oman], மகேந்திரன் [Saudi], ராஜ்குமார் [Qatar], யோகேந்திரன் [West Germany], நந்தகுமார், வசந்தகுமாரி, சகுந்தலா ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலயோகினி [U.K.], சகுந்தலா [Oman], பரமேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், லக்ஷ்மனா [U. K.], ஜனா [U. K.], அனுஷா, கோபிநாத், பிரவீனா, [Oman] ஆகியோரின் அன்புப்பேரனும், திருமதி தம்பையா, நவரத்தினம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரரும், துரைசிங்கம், விஜயசிங்கம், ஜெயரத்தினம், குணசிங்கம், யோகரத்தினம், திருமதி சங்கரப்பிள்ளை, திருமதி துரைராசா, திருமதி சரவணமுத்து ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 4-2-86 செவ்வாய்க்கிழமை (இன்று) பி. ப 4-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

[C556]

## சுப்பிரமணியம் வேல்முருகு

புலோலி, பல்லப்பையைச் சேர்ந்தவரும் பிரபல வர்த்தகரும் M. P. வீரவாகு ஸ்தாபகரும் ஆகிய சு. வேல்முருகு 3-2-86 திங்கட்கிழமை காலமானார். இவர் இராசம்மா பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசலட்சுமி, செல்லம்மா, சுந்தரலிங்கம் (M P V. குருணாகல், கிளிநொச்சி), சிவானந்தன் (M. P. V. யாழ்ப்பாணம்), திலகரட்ணம் (Germany), நாகராசா (America), சரோஜினிதேவி, சந்திராதேவி, வீரவாகு (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணாசலம் (Raja Corporation), முருகேசு [S. S. கணபதி and Co.], விஸ்வலிங்கம் (கைத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), கந்தசாமி (ஆசிரியர். இந்து தமிழ் மகா வித்தியாலயம், குருணாகல்), பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சாவித்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காந்திமதி, மகாதேவா, கருணாதேவா, வளர்மதி, பாலசுப்பிரமணியன், பாக்கியலட்சுமி, பாலகணேசன், பாலசுந்தரி, பாலகௌரி, பாலமுரளி, திருமகள், சந்திரிக்கா, தயாளினி, தர்சினி, புவியரசு, சுவர்ணா, துளசி, காயத்திரி, காண்டீபன், வத்சலா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. சுந்தரலிங்கம்.

புலோலி தெற்கு,
புலோலி.

C 568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org